நமது
# தமிழ்மண்
ஆசிரியர் : தொல்.திருமாவளவன்
₹15
VOL:20 • ISSUE:224 • பிப்ரவரி 2026



# சிறுத்தைகள் இருக்கும் வரையில் பெரியாரியத்தை வீழ்த்த முடியாது!

**எழுச்சித்தமிழர் ஆவேசம்**



**மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு இந்துத்துவமயமானது!**

• எழுச்சித்தமிழர்

**எழுச்சித்தமிழர் பேசியதில் என்ன தவறு?**

• பேரா.த.ஜெயராமன்





**எனக்கு எந்த அரசன் மீதும் மதிப்பு கிடையாது:**

# மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு இந்துத்துவமயமானது!

## எழுச்சித்தமிழர் ஆவேசம்

**சென்னை, கொளத்தூர் பகுதியில் 29.01.2026 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நடைபெற்ற தாய்த்தமிழ் காத்த போராளிகள் மற்றும் கரும்புலி முத்துக்குமார் நினைவேந்தல் கருத்தரங்கில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

முதலில் நடராசன் — தாளமுத்து உள்ளிட்ட அன்னைத் தமிழைக் காப்பதற்காக தம் இன்னுயிரை நீத்த போராளிகளுக்கும், ஈழ விடுதலைக்காக தன்னை மாய்த்துக்கொண்ட தம்பி முத்துக்குமார் அவர்களுக்கும் எமது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன்.

நடராசன்—தாளமுத்து ஆகியோர் 1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்புப் போரில் தம்மைத் தமிழுக்காக ஒப்படைத்துக் கொண்டவர்கள்; உயிரை ஈகம் செய்தவர்கள். அந்த முதல் போர்; தந்தை பெரியாரின் தலைமையில் நடந்த முதல் போர்.

காவல் துறையினரால் சிறைப் படுத்தப்பட்ட அந்தப் போராளிகள் இருவரும் சிறையிலே அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி உயிரிழந்தார்கள். முதலில் நடராசன் உயிரிழந்தார் சனவரி 15 அன்று; பிறகு, மார்ச் 11 அன்று தாளமுத்து உயிரிழந்தார். ஆகவேதான், ‘அந்தப் பெயரை வரிசைப்படுத்தும் போதுகூட ‘நடராசன்

— தாளமுத்து' என்று வரிசைப்படுத்த வேண்டும்' என நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

**நடராசன் – தாளமுத்து ஈகம்**

அவர்கள் உயிர் ஈகம் செய்ததின் விளைவாகத்தான் அப்போது நம்மீது திணிக்கப்படவிருந்த வடவர்களின் கலாச்சாரம் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்தி தடுக்கப்பட்டது என்பதைவிட வடஇந்தியர்களின் ஆதிக்கம் தகர்க்கப் பட்டது; அவர்களின் கலாச்சாரத் திணிப்பு முறியடிக்கப்பட்டது. அன்றைக்கு பெரியார் தலைமையில் அந்தப் போர் வெடிக்காமல் இருந்திருந்தால், நடராசன்—தாளமுத்து ஆகியோர் ஈகம் செய்யாமல் இருந்திருந்தால் நாமெல்லாம் பிறப்பதற்கு முன்பே தமிழ் பேசக் கூடியவர்களாக இருந்த நம் முன்னோர் இந்தி பேசக்கூடியவர்களாக மாறியிருப்பார்கள். அவர்களின் கலாச்சாரமே நமது கலாச்சாரமாக மாறியிருக்கும். நம்முடைய தனித்துவத்தை நாம் இழந்திருப்போம். இன்றைக்கு மோடி வித்தைக்கு நாம் மயங்கி விழுந்திருப்போம்.

அவர்களால் இன்றைக்கு நம்மை வெல்ல முடியாமல் இருப்பதற்கு 1938இல் நடந்த மொழிப்போரும், 1965இல் நடந்த மொழிப்போரும்தான் தடுப்பு அரண்களாக இருந்தன. நம்மைப் பாதுகாக்கும், நம் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பாதுகாப்பு அரண்களாக இருந்தன என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் பா.ச.க.வினர் இல்லை; காங்கிரஸ்காரர்கள்தான். அன்றைக்கு தமிழ்நாட்டை ஆண்டவர்கள் திராவிடக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அல்ல; காங்கிரஸ்காரர்கள்தான். தில்லியிலும் எல்லா மாநிலங்களிலும் காங்கிரஸ் ஆண்டுகொண்டிருந்த காலம் அது; தமிழ்நாடு உட்பட. ஆகவே, காங்கிரஸ் காரர்களாக இருந்தாலும் சரி; அல்லது பா.ச.க.காரர்களாக இருந்தாலும் சரி அவர்கள் வடஇந்தியக்காரர்கள் என்கிற நிலையில் இந்தியை இந்தியாவின் தேசிய மொழியாக ஆக்கவேண்டும், ஒரே மொழியாக ஆக்கவேண்டும் என்கிற உணர்வைப் பெற்றவர்கள். இன்றைக்கும் அந்த உணர்வுதான் அவர்களிடையே இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

அவர்கள் கட்டமைக்க விரும்புகிற இந்தியாவில் ஒரு மதம் இருக்கவேண்டும், ஒரு மொழி இருக்கவேண்டும், ஒரு கலாச்சாரம் இருக்கவேண்டும். பல மொழிகள் கூடாது, பல மதங்கள் இருக்கக்கூடாது; ஒரே மதம்தான். இதுதான் தில்லியிலிருந்து ஆளுவோரின் எண்ணம். ஒரு சிறிய மாறுபாடு, காங்கிரஸ் அல்லது காந்தி அல்லது ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் பன்மைத்துவத்தை எதிர்க்கவில்லை.

> **உண்மையான தமிழ்த்தேசியத்தை வென்றெடுக்கும் ஆற்றல் பெற்றவர்கள் விடுதலைச் சிறுத்தைகள்தான் என்பதை உணர்த்தக்கூடிய வகையில் விரைவில் 'தமிழ்த்தேசிய எழுச்சிய மாநாடு' தமிழ்நாடு தழுவிய அளவில் நடைபெறும் என்பதை அறிவிக்கிறேன்.**

எனவே, 1965இல் 'இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிக்க மாட்டோம்' என்கிற ஒரு உடன்பாட்டுக்கு வந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு முற்போக்கான சிந்தனையைக் கொண்ட ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழர்களின் போராட்டத்தைக் கடுமையாக விமர்சித் தார்கள். ஆனால், அவர்கள் ஒரே மொழிதான் இருக்கவேண்டும்; ஒரே மதம்தான் இருக்கவேண்டும் என்பதை ஒரு தீவிரமான வெளிப்பாடாக எடுக்க வில்லை.

ஆனால், இந்தி பேசக்கூடிய மாநிலங்களைச் சார்ந்தவர்கள்தான் இன்றைக்கு காங்கிரசிலும் சரி, பா.ச.க.விலும் சரி; முடிவெடுக்கக்கூடிய இடத்தில் இருக்கிறார்கள்; தீர்மானிக்கக்கூடிய இடத்தில் இருக்கிறார்கள். அதனால்தான்

இன்றைக்கு பா.ச.க அதே சிந்தனையை தங்களின் கொள்கை ஆசான் கோல்வால்கர், ஹெட்கேவார் ஆகியோரின் வழியில், ஒரே மொழி; ஒரே கலாச்சாரம். ஒரே மதம்; ஒரே கலாச்சாரம். ஒரே தேசம்; ஒரே கலாச்சாரம் என்பதை வடிவமைப்பதற்குத் தீவிரமாக முனைகிறார்கள். அதனடிப் படையில்தான் இன்றைக்கும் இந்தியைத் திரும்பத்திரும்பத் திணிக்கிற முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். கூடுதலாக சமஸ்கிருதமயமாதலைத் தீவிரப்படுத்துகிறார்கள். இப்படியான ஒரு சூழலில் அவர்களால் மொழிவழித் தேசியத்தை ஏற்கவே முடியாது. அப்படிப் பார்க்கிறபோது இலங்கையிலும் தமிழ்வழி என்கிற தேசியம் மொழிவழித் தேசியத்தின் அடிப்படையில் உருவாகுவதை இந்திய ஆட்சியாளர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்மாட்டார்கள்.

### மொழிவழித் தேசியமும் தமிழீழமும்

மொழிவழித் தேசியம் அடிப்படையில் தமிழீழம் உருவாகும் என்கிற நிலை, ஒரு வரலாறு ஏற்பட்டு விட்டால் அது இந்தியாவை பெரும் தாக்கத்திற்கு உள்ளாக்கும். மொழிவழித் தேசியம் என்பது வலுப்பெற்றுவிடும். தமிழ்நாடு தனிநாடாகும் நிலை உருவாகும். பிற மாநிலங்களும் அதையே பின்பற்றும் சூழல் உருவாகும். எனவே, எந்தச் சூழலிலும் மொழிவழி அடிப்படையில் ஒரு தேசம் அண்டையில் உருவாகுவதைக்கூட இந்திய ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

இந்தியா என்பது ஒரு பேரரசு, வல்லரசு. அண்டை நாடுகளில் எத்தகைய ஆட்சியாளர்கள் இருக்க வேண்டும் என்பதில் எப்போதும் கவனமாக இருக்கிற ஒரு அரசு. அந்த அரசு தமிழீழம் வெல்வதற்கு, தனி நாடு உருவாவதற்கு உடன்படுமா? என்றால் காங்கிரஸ் ஆண்டாலும் உடன்படாது, பா.ச.க தொடர்ந்தாலும் உடன்படாது. இந்தியாவின் ஆதரவு இல்லாமல், இந்தியாவின் தயவு இல்லாமல் அந்தப் போராட்டத்தில் நம்மால் அடுத்த அடியை எடுத்துவைக்க முடியுமா என்றாலும் முடியாது. இதுவும் கசப்பான உண்மைதான். இந்தக் கசப்பான உண்மையோடுதான் தம்பி முத்துக்குமாரின் ஈகத்தையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கசப்பான உண்மையோடுதான் முத்துக்குமார் இறந்தவுடன் அடுத்தடுத்து தன்னை மாய்த்துக்கொண்ட போராளிகளின் ஈகங்களையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதில் நேரிடையாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மூன்று தோழர்கள் தங்களை மாய்த்துக்கொண்டார்கள். நாம் உருவாக்கி வைத்த அந்த உணர்வு, நாம் பேசிய அந்த அரசியல், நாம் மூட்டிய அந்த விடுதலை நெருப்பு. தமிழ்நாட்டில் பற்றிப்படரத் தொடங்கியது. இதை எல்லா மேடைகளிலும் நான் பேசியிருக்கிறேன்; மீண்டும் நினைவூட்டுகிறேன்.

### அற்பர்கள் முன்வைக்கிற அவதூறுகள்

வன்னியைச் சூழ்ந்துகொண்டது சிங்கள—பௌத்த—பேரினவாதத்தின் படை. அவர்களுக்குத் துணை நின்றவை இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளின் படைகள். ஒரு நாடு மட்டும் ஈழத்தின் புலிகளின் படையைச் சுற்றி சூழ்ந்துகொள்ளவில்லை. 22 நாடுகளின் இராணுவமும், இராணுவ வல்லுநர்களும் புலிகளுக்கு எதிராக நின்றார்கள். இந்தியா மட்டும்தான் சிங்களவர்களுக்குத் துணை நின்றது என்கிற பொருளில் பலர் பேசுகிறார்கள். தேர்தல் அரசியலில் எடுத்த முடிவை வைத்துக்கொண்டு; நாமும் அதற்குக் காரணமாக இருந்தோம் என்ற அவதூறுகளைப் பரப்புகிறார்கள். இது அரசியலைப் புரிந்துகொள்ளாத அற்பர்கள் வைக்கிற அவதூறுகள். இந்திய அரசு நினைத்தாலும் அந்த யுத்தத்தை ஒரு கட்டத்தில் நிறுத்த முடியாது என்கிற நிலைக்கு அது போய்விட்டது. உலக நாடுகள் ஒன்றுசேர்ந்து அதனை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற புரிதலோடுதான் களத்தில் நின்றார்கள். அதனால்தான் யுத்தம் முடிந்து பல மாதங்கள் வரையிலும்கூட ஐ.நா.வின் பொதுச்செயலாளர் அங்கே



**கரும்புலி முத்துக்குமாருக்கு அஞ்சலி செலுத்தும் எழுச்சித்தமிழர், நடிகர் சத்யராஜ், இயக்குநர் புகழேந்தி தங்கராசு உள்ளிட்ட முன்னணித் தோழர்கள்.**

பயணிக்க விரும்பவில்லை. பல மாதங்கள் கழித்துதான் சென்றுவிட்டு வந்தார்.

**ஐ.நா. பேரவையின் ஒப்புதலோடு நடந்த யுத்தம்**

இஸ்ரேல்மீது யுத்தம் நடக்கிறது என்றால் உடனே தலையிடுகிற ஐ.நா. ஈழத்தின்மீது, ஈழப் பொதுமக்களின்மீது நிகழ்த்தப்படுகிற கொடூரமான அந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்குத் தலையிடாமல் இருந்ததற்கு என்ன காரணம் என்றால், ஐ.நா. பேரவையின் ஒப்புதலோடும், மறைமுக ஒப்புதலோடும் அந்த யுத்தம் நடந்தது என்பதுதான். உலக நாடுகள் வேடிக்கை பார்த்தன. அதற்கு ஒரே காரணம் தான், ஒற்றைக் காரணம்தான் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று சித்திரித்து அதை நிலைப்படுத்தி விட்டார்கள். அங்கே நடந்த யுத்தம் விடுதலைக்கான யுத்தமாகக் கருதாமல் சில ஆயுதம் தாங்கிய குழுவினர் அரச நிர்வாகத்திற்கு எதிராக வன்முறை வெறியாட்டத்தில், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அந்தப் பயங்கரவாதக் குழுவை நசுக்கவேண்டும் என்று உலகளாவிய ஒரு கருத்தை உருவாக்கி அதை நிலைப்படுத்திவிட்டார்கள். அந்த நடவடிக்கை என்பது பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை. அது விடுதலைப் போராட்டத்திற்கான நடவடிக்கை என்று அவர்கள் கருதவில்லை. அப்படியொரு கருத்தை உருவாக்கவில்லை. இந்த அடிப்படையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

உலகம் முழுவதும் பயங்கரவாத இயக்கத்திற்குத் தடையென்கிற பெயரில் எல்.டி.டி.க்கும் தடை விதிக்கப்பட்டது. அதன் கொடியைப் பயன்படுத்தக் கூடாது, சின்னத்தைப் பயன்படுத்தக்கூடாது, நிதி திரட்டி புலிகளுக்கு அனுப்பக்கூடாது, என்கிற வகையில் உலகம் தழுவிய அளவில் அமெரிக்க ஆதரவு நாடுகள், இங்கிலாந்து உட்பட ஐரோப்பிய நாடுகள், கனடா போன்ற எல்லா நாடுகளும் புலிகளுக்கு எதிராக, தமிழீழ விடுதலைக்கு எதிராக ஒரு நிலைப்பாட்டை எடுத்து, ஒன்றுசேர்ந்து, ஒருங்கிணைந்து அந்த யுத்தத்தை நடத்தியபோது, தமிழ்நாடு பொங்கல் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருந்தது; திருமாவளவனைத்தவிர, விடுதலைச் சிறுத்தைகளைத் தவிர.

அங்கும், இங்கும் ஓடிப்பார்த்தேன்; தலைவர்களோடு பேசிப்பார்த்தேன்; முட்டிப் பார்த்தேன், மோதிப் பார்த்தேன்.

யாரையும் என்னால் ஒருங்கிணைக்க முடியவில்லை. அதை மீண்டும் மீண்டும் நான் மேடைகளில் பேச விரும்பவில்லை. வேறுவழியில்லாமல் 'நாம் மட்டுமாவது சாகும்வரை உண்ணாநிலை அறப் போராட்டத்தை மேற்கொள்வோம்' என்று முடிவெடுத்து, கட்சியின் முன்னணித் தலைவர்கள் யாரிடத்திலும் கலந்து பேசாமல், இரவோடு இரவாக மறைமலை நகரைத் தேடிச்சென்று அங்கே பெரும்பரப்பளவுள்ள மைதானத்தில் ஒரு பந்தலைப்போட்டு பொங்கல் நாளில் நான் உண்ணாநிலை அறப்போராட்டத்தைத் தொடங்கினேன். என்னை ஊக்கப்படுத்த வேண்டியவர்கள்,எனக்கு உற்றதுணையாக இருக்கவேண்டியவர்கள், அதை ஒரு துருப்புச்சீட்டாக, என்னையொரு துருப்புச்சீட்டாக எடுத்துக்கொண்டு எப்படியாவது அதை நிறுத்தவேண்டும் என்பதில்தான் ஆர்வம் காட்டினார்கள். நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் இருக்கலாம் அல்லது உள்நோக்கத்தின் அடிப்படையிலும் இருக்கலாம் என்று கருதக்கூடிய வகையில் அன்றைக்கு அந்தப் போராட்டத்தை நிறுத்துவதில் எல்லோரும் குறியாக இருந்தார்கள்.

**உளவுத்துறை தந்த அறிக்கை**

தி.மு.க.கூட்டணியில் இருந்துகொண்டே அந்த முடிவை எடுத்தபோது, "திருமாவளவன் நடராசனோடும், நெடுமாறனோடும் சேர்ந்துகொண்டு இந்த அரசுக்கு நெருக்கடி தருகிறான்" என்றுதான் உளவுத்துறை அறிக்கை தந்தது. முதலமைச்சரின் பிரதிநிதியாக ஆற்காடு வீராசாமி நேரில் வந்து போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று வலியுறுத்தினார். நான் மறுதலித்தேன். 'உண்ணாநிலை அறப்போராட்டம் எல்லாம் நம்முடைய வழிமுறையில்லை' என்று தமிழர் தலைவர் அய்யா வீரமணி அவர்கள் என்னை நேரில் வந்து சந்தித்து அதைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார். 'உங்களை மீறுவதாக எண்ணவேண்டாம், நான் எடுத்த முடிவைத் தொடர்கிறேன் அய்யா; மன்னித்துவிடுங்கள்' என்று தொடர்ந்தேன். என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகள்தான் என்னோடு களத்தில் நின்றார்கள்; பொங்கலைத் தவிர்த்தார்கள். மூன்றாவது நாள், நான்காவது நாள் என்று ஆங்காங்கே பதற்றம் உருவானது, சட்டம்—ஒழுங்கு சீர்குலையும் நிலை உருவானது. 4வது நாள் 26 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் தி.மு.க தலைமையிலான அரசு சிறைப்படுத்தியது. தமிழ்நாடு முழுவதும் 26 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் சிறைப்படுத்தப்பட்டார்கள்.

**ஒரு தமிழன் என்கிற உணர்வோடு என்னை ஒப்படைத்துக்கொண்டேன்**

நாங்கள் புல்லாரெட்டி அவின்யூவில் ஒருங்கிணைத்த 'கருத்துரிமை மீட்பு மாநாட்டை' தடை செய்ய வேண்டுமென்று இந்தப் பிரச்சினையெல்லாம் முற்றுவதற்கு முன்பாக விடுதலைச் சிறுத்தைகளுக்கு எதிராக காங்கிரஸ் அன்றைக்கு பேசியது. எந்த உள்நோக்கமும் இல்லால், யாருடைய தூண்டுதலுக்கும் ஆளாகாமல் நேர்மையோடு இந்தப் பிரச்சினையைக் கையிலெடுத்த இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. நான் சென்னைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்த 1983லிருந்து 2009 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நடக்கிற வரையில் ஈழ விடுதலைக்கான களத்தில் ஒரு தமிழன் என்கிற உணர்வோடு முழுமையாக என்னை ஒப்படைத்துக் கொண்டேன். எந்த எதிர்ப்பார்ப்பும் எனக்குக் கிடையாது.

**விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தில் உறுப்பினரானேன்**

விடுதலைப் புலிகள் அமைப்பின் மாணவர் இயக்கத்தில் என்னை உறுப்பினராகச் சேர்த்துக்கொண்டு அவர்களோடு பயணித்தவன் நான். STUDENT ORGANISATION LIBERATON OF TIGER (SOLT) என்கிற அமைப்பில் ஐந்து ரூபாய் கட்டணம் செலுத்தி உறுப்பினராக என்னைப் பதிவு செய்து கொண்டேன். 21 வயது, அப்போது பெரியார் திடலில் ஈழ விடுதலைக்கு ஆதரவாக மாணவர் மாநாட்டை என் தலைமையில் நடத்தியவன். அந்த நாளிலிருந்து எனக்குத் தெரிந்த வகையில் நான் ஈழத்தமிழர்களுக்காக கவிதைகளை



எழுச்சித்தமிழரின் உரை தொகுப்பான 'சிறுத்தைகள் இருக்கும்வரை பெரியாரியத்தை வீழ்த்த முடியாது' நூல் வெளியீடு

நிறைய பாடியிருக்கிறேன். ஒன்றையும் நான் தொகுத்து வைக்கவில்லை. 'விடுதலைப் புலிகள்' என்கிற பெயரில் கையெழுத்து ஏட்டை மூன்று மாதங்கள் நடத்தினேன். அதன்பிறகு எனக்கு மஞ்சள் காமாலை வந்ததால் அதைக் கைவிட நேர்ந்துவிட்டது.

**ஈழத்திற்குச் செல்லும் முயற்சி**

ஈழத்திற்குச் செல்லவேண்டும் என்று சட்டக்கல்லூரி மாணவனாக இருந்த போது ஐந்து பேரைத் தயார்படுத்திக் கொண்டு நான் ஒருவர் மூலமாக அந்த ஏற்பாட்டைச் செய்த காலத்தில் அது நிறைவேறாமல் போய்விட்டது. எங்களை வரச்சொன்னவர் வராமல் போய்விட்டார் அல்லது வேறொரு வேலை அவர் எங்களுக்குக் கொடுத்தபோது அதை நாங்கள் தவிர்த்துவிட்டோம். அதனால், நான் அன்றைக்கு கடல்வழியாக ஈழத்திற்குச் செல்லும் முயற்சி நின்று போனது. அப்படிச் சென்றிருந்தால் நானும் புலிகளோடு ஒருவனாக அந்தக் களத்தில் மாண்டு போய் இருப்பேன்.

அப்படியெல்லாம் தன்முனைப்போடு களத்தில் நின்ற என் நிலைப்பாட்டை வெறும் தேர்தல் அடிப்படையிலான ஒரு காரணத்திற்காக இன்றைக்கும் சில அற்பர்கள் அந்தக் காலத்தில் இந்தப் போராட்டத்தில் எந்தப் பங்களிப்பும் செய்யாதவர்கள், இப்படிப்பட்ட நெருக்கடிகள் இருந்த காலத்தில், 'பொடா' இருந்த காலத்தில் வெளியே வராதவர்கள், அப்போது பிறக்காத நிலையில் இருந்த சிலர் இன்றைக்கு திருமாவளவனின் போராட்டத்தையும், ஈகத்தையும் கொச்சைப்படுத்துகிற நிலை வந்திருக்கிறது. அதில் ஒன்று தம்பி முத்துக்குமார் இறப்பின்போது நடந்த அவதூறு.

சுபாஷ் சந்திரபோஸ் இங்கே சொன்னார், எல்லாத் தலைவர்களும் அங்கே இருந்தார்கள். அந்தத் தம்பி எழுதிய மரண சாசனத்தை அப்போது நாம் அனைவரும் படித்தோம். எல்லோருக்கும் தெரியும். "என்னை உடனே அடக்கம் செய்துவிடாதீர்கள். காவல்துறை என்னை அடக்கம் செய்ய முயற்சிக்கும் விட்டுவிடாதீர்கள். என்னை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி இந்தப் போராட்டத்தைக் கூர்மைப்படுத்துங்கள்" என்று சொன்னார். அதை யார் முன்னின்று செய்வது? அவர், விடுதலைப்புலிகள் தோழர்களுக்குச் சொன்ன கருத்தா அல்லது தமிழ்நாட்டில் நம்மைப் போன்றவர்களுக்குச் சொன்ன கருத்தா? எந்த அமைப்புக்குச் சொன்ன கருத்தா? யார் முன்னின்று அதனைச் செய்ய முடியும்? ஏதேனும் ஒரு இயக்கத்தைச் சார்ந்தவராக இருந்திருந்தால், அந்த இயக்கத்தின் தலைமை ஒரு முடிவு எடுக்க முடியும். அவர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்தவராக இருந்திருந்தால், அவருடைய மரண சாசனத்தை வைத்துக்கொண்டு, 'நான் இந்த உடலை அடக்கம் செய்யவிடமாட்டேன், முடிந்தவரையில் இந்தப் போராட்டத்தை நாங்கள் கூர்மைப்படுத்துவோம்' என்று

நான் முடிவெடுக்க முடியும். நான் முடிவெடுத்தால் அது ஏற்கப்படும் நிலையில் இருக்கும். ஆனால், அவர் எந்த இயக்கத்தையும் சாராதவர். யார் அந்த முடிவை எடுக்க முடியும்? அவரவர் வந்து நானும் தமிழன், நானும் தமிழன் என்கிற உணர்வைக் கொட்ட முடிந்ததே தவிர அவருடைய மரண சாசனத்தை ஒரு அறிவிப்பாக எடுத்துக்கொண்டு, அவர் விருப்பப்படி 'அந்த உடலை நாங்கள் இப்போது அடக்கம் செய்யமாட்டோம்' என்று துணிந்து சொல்வதற்கான சூழல் இருந்ததா என்றால், இல்லை.

**ஏன் திருமாவளவன் பின்னால் அவர்களால் வர முடியவில்லை?**

மருத்துவர் இராமதாஸ் அவர்களும் நானும் சேர்ந்து தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத்தை நடத்தினோம். தேர்தல் காரணத்தால் நானும் அவரும் பிரியும் நிலை ஏற்பட்டது. பிரிந்தபோது தமிழ் உணர்வாளர்களும், தமிழறிஞர்களும் யார் பின்னார் போனார்கள். உடனே மருத்துவர் ராமதாஸ் அவர்களின் பின்னால் போய் விட்டார்கள். யாரும் திருமாவளவன் பின்னால் வரவில்லை. எது தடுத்தது? ஏன் திருமாவளவன் பின்னால் அவர்களால் வரமுடியவில்லை? இராமதாஸ் அவர்கள் ஒரு இயக்கத் தலைவராக வந்தபோது அவரைத் தோளில் தூக்கிவைத்துக் கொண்டாடியவர்கள் பெரியாரியவாதிகளும், மார்க்சியவாதிகளும், மார்க்சிய—லெனினியவாதிகளும். தி.மு.க.வுக்கும், அ.தி.மு.க.வுக்கும் மாற்றாக

> **ஒரு நபர்கூட திருமாவளவன் பின்னால் நிற்கவில்லை அல்லது திருமாவளவனுக்கு ஆறுதலாக நிற்கவில்லை. முட்டிமோதி, சொந்தக்காலை ஊன்றி, கையை ஊன்றி, கரணம் போட்டுத்தான் திருமாவளவன் இன்றைக்கு இந்த இடத்தில் நிற்கிறான்.**

ஒரு தலைவர் வந்துவிட்டார், ஒரு புதிய ஆட்சிமாற்றத்தை நாம் ஏற்படுத்தப் போகிறோம். 'இனி தி.மு.க வேண்டாம், அ.தி.மு.க வேண்டாம்' என்று அவரைத் தோளில் தூக்கிக்கொண்டாடியவர்கள் யாராவது திருமாவளவன் பக்கத்தில் வந்து ஆறுதல் சொல்லியிருப்பார்களா? ஆதரவு தெரிவித்திருப்பார்களா? ஒரு வார்த்தை ஊக்கப்படுத்தியிருப்பார்களா? இந்த எளிய மக்களை அமைப்பாக்குகிற முயற்சியில் இவ்வளவு கடுமையான போராட்டத்தை முன்னெடுக்கிற திருமாவளவனுக்கு யாராவது துணை நின்றிருப்பார்களா? யாரும் கிடையாது. அவரைத் தலைவர், தமிழினக்காவலர் என்றெல்லாம் தூக்கிக்கொண்டாடிய ஒரு நபர்கூட திருமாவளவன் பின்னால் நிற்கவில்லை அல்லது திருமாவளவனுக்கு ஆறுதலாக நிற்கவில்லை. முட்டிமோதி, சொந்தக்காலை ஊன்றி, கையை ஊன்றி, கரணம் போட்டுத்தான் திருமாவளவன் இன்றைக்கு இந்த இடத்தில் நிற்கிறான்.

**அவ்வளவு எளிதாக தமிழ்ச்சமூகம் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை**

எனக்கு யாரும் மேடை போட்டுத் தரவில்லை பேசவைக்க. நானே வலிந்து, நான் ஒரு பெரியாரியவாதி, நான் ஒரு அம்பேத்கரியவாதி, நான் ஒரு மார்க்சியவாதி என்று கம்யூனிஸ்ட்டுகளோடு உறவாடினேன். பெரியார் இயக்கங்களோடு உறவாடினேன். நானே வலிந்து, வலிந்து அவர்களின் அலுவலகங்களுக்கு தேடிப் போனேன். நான் ஏறாத அலுவலகங்கள் இல்லை, நான் சந்திக்காத தலைவர்கள் இல்லை. நானே வலிந்து பிற மேடைகளில் ஏறிப்பேசி, நான் இப்படிப்பட்டவன் என்று காட்டிக்கொள்கிற நிலை அன்றைக்கு இருந்தது. என்னை அவ்வளவு எளிதாக இந்த தமிழ்ச் சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. என் தலைமையை ஏற்றுக்கொள்ளவில்லை.

அப்படிப்பட்ட நிலையில் "முத்துக் குமாரின் உடலை இங்கே வையுங்கள், அவன் என் தம்பி. பிரபா கரனிடத்திலும்,

திருமா வளவனிடத்திலும் சொல்லுங்கள் என்று சொன்னவன். அவன் மரண சாசனப்படி இந்த உடல் இங்கே இருக்கட்டும், கொளத்தூரில் கிடக்கட்டும்" என்று நான் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளும் நிலை அன்றைக்கு உண்டா? இல்லை. அவன் உடலை எடுத்துக்கொண்டார்கள். ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. புறப்பட்ட நேரத்தில் ஒரு சிறிய திருத்தம் செய்தேன். அது என்னுடைய கடமை. அது என்னுடைய பொறுப்பு.

வன்முறை நிகழ்ந்துவிடக் கூடாது. மறுபடியும், புரசைவாக்கம், டவுட்டன் வரையில் சென்று, அதன்பிறகு வால்டாக்ஸ் சாலையைப் பிடித்து கொருக்குப் பேட்டைக்குப் போக வேண்டும் என்று முயற்சித்தார்கள். அப்போது நான் சொன்னேன், "இப்படி நீங்கள் சென்றால் விடிந்துவிடும். அந்த உடலை அடக்கம் செய்யவேண்டும் என்கிற முடிவை எடுத்த பிறகு நாம் அந்த நேர் வழியில் செல்வதுதான் சரி" என்று நெடுமாறன் அவர்களின் விருப்பத்தை அறிந்து, அண்ணன் வைகோ அவர்களின் விருப்பத்தை அறிந்து, அதனடிப்படையில் நான் மேடையேறி நின்று சொன்னேன்.

**என் நிலைப்பாட்டில் ஒருபோதும் தி.மு.க தலையிட்டதில்லை**

உடனே, திருமாவளவனைவிட தீவிரமான தமிழ்ப்பற்றுள்ள, இனப்பற்றுள்ள பலர் திரைப்படத் துறையைச் சார்ந்தவர்களும் உடனே அங்கேயே 'திருமாவளவன் தி.மு.க.வின் கைக்கூலி' என்று பேசத் தொடங்கி விட்டார்கள். என் நிலைப்பாட்டில் ஒருபோதும் தி.மு.க தலையிட்டதில்லை. எல்லா மேடைகளிலும் நான் அண்ணன் பிரபாகரனைப் பேசியிருக்கிறேன். விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியிருக்கிறேன். என்னை ஒருபோதும் தி.மு.க தடுத்ததில்லை. அது வேறு; அது தேர்தல் உறவு. ஆனால், விடுதலைச் சிறுத்தைகளின் கருத்தியல் சார்ந்த எந்த நிலைப்பாட்டிலும் தி.மு.க.வோ, தி.மு.க தலைமையோ இந்த நாள் வரையில் தலையிட்டதில்லை. ஆனால், இன்றைக்கும் என் தலைமையை ஏற்றுக்கொள்ள முடியாத சாதியவாதிகள் அற்பத்தனமாக அவதூறுகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

**எனக்கு எந்த அரசன்மீதும் மதிப்பு கிடையாது**

உலகம் முழுவதும் அண்ணன் சொல்லித்தான் நான் புலம்பெயர்ந்த நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். அண்ணன் பிரபாகரன் அவர்கள் என்னை அடையாளப்படுத்திய பிறகுதான் உலகம் தழுவிய அளவில் புலம்பெயர்ந்த நாடுகளின் அழைப்பையேற்று நான் சென்றிருக்கிறேன், பேசியிருக்கிறேன். அவர் என்னைத் தனிமையில் சந்தித்து உரையாடியதையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்ல முடியாது. அவருடைய பேச்சில் இருந்த ஒரு கருத்து அவர் சாதி ஒழிப்புடன் கூடிய தமிழ்த்தேசியத்தை முன்னெடுத்தார். இதைத்தான் நான் சொல்லுகிறேன்.

இதை உங்களால் பேசமுடியாது. நீங்கள் குடிப்பெருமையைப் பேசக் கூடியவர்கள். நீங்கள் ஆண்ட பரம்பரையைப் பேசக்கூடியவர்கள். எனக்கு எந்த அரசன்மீதும் மதிப்பு கிடையாது. எவரையும் நான் பெரிய சக்தியாகப் பார்ப்பது கிடையாது. அந்த மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவரானது, சமற்கிருதமயமானது, இந்துத்துவமயமானது, கோயிலின் கருவறைக்குள் இருந்த தமிழைத் தூக்கி வெளியே வீசப்பட்டதெல்லாம் பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள், சேர மன்னர்கள், பல்லவ மன்னர்கள் ஆண்ட காலத்தில்தான்.

வேள்வி நடத்தியவன், யாகம் நடத்தியவன், தமிழ்ப்பெயர்களை மாற்றி வடமொழிப் பெயர்களைத் தங்களின் பெயர்களுக்குப் பின்னால் சூட்டிக்கொண்டவர்கள். இராஜ ராஜன் என்பது தமிழ்ப்பெயரா? இராஜேந்திரன் என்பது தமிழ்ப்பெயரா? எல்லாம் வடமொழிப் பெயர்களைச் சூட்டிக்கொண்டவர்கள். வடமொழியில்

மயங்கிக் கிடந்தவர்கள். பார்ப்பனர்களின் வேள்வி யாகங்களில் மயங்கிக் கிடந்தவர்கள். அவர்கள் எப்படிப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும் அவர்கள் எம் தமிழ் அழிவதற்கும், எம் கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே, ஆண்ட பரம்பரை என்று சொல்வதில் எனக்கு எந்தப் பெருமையும் இல்லை. அதிலே எனக்கு உடன்பாடு கிடையாது. வெறும் மொழி உணர்வு எனக்குக் கிடையாது. வெறும் மொழிப்பற்று எனக்குக் கிடையாது. வெறும் இனஉணர்வு, இனப்பற்று தேவையில்லை என்று கருதக்கூடியவன் நான். அதுதான் பெரியாரின் பார்வையும். சாதியை ஒழிக்காமல் இங்கே சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது என்பதில் உறுதியாக நின்றவர் தந்தை பெரியார். அதே கருத்தைக் கொண்டவர்தான் அண்ணன் மேதகு பிரபாகரன் அவர்கள்.

### சாதி ஒழிப்புடன் கூடிய தமிழீழம்

எதிரிகளை அடையாளப்படுத்தும்போது ‘சிங்கள—பௌத்த—பேரினவாதி’ என்று சொல்கிறார் பிரபாகரன். ஒரு இடத்தில்கூட தன்னை அடையாளப்படுத்துகிறபோது ‘தமிழ்—இந்து—சிறுபான்மை’ என்று சொல்லவில்லை. தமிழன் என்கிற தேசிய இன அடையாளத்தை மட்டும்தான் அவர் உயர்த்திப் பிடித்தார். அவரை இந்த அடிப்படையில்தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். மத உணர்வுக்கு அப்பாற்பட்டவர், மத அடையாளத்திற்கு அப்பாற்பட்டவர்.

இந்து என்கிற மத அடையாளத்தைத் தவிர்க்கக்கூடியவன் சாதி ஒழிப்பில் உறுதியாக இருக்கிறவன் என்று பொருள். சாதி ஒழிப்புடன் கூடிய தமிழீழம் அங்கே மலரவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தவர் அண்ணன் பிரபாகரன். இந்த அடிப்படையில் அண்ணன் பிரபாகரன் அவர்களை ஒருவனால் புரிந்துகொள்ள முடியவில்லையென்றால் அவனால் எந்தக் காலத்திலும் அவர் கனவை நனவாக்க முடியாது. அவர் விரும்பிய ஈழத்தை வென்றெடுக்க முடியாது. விடுதலைச் சிறுத்தைகள் இப்படி கருத்தியல் அடிப்படையில்தான் ஈழ விடுதலையையும் அணுகுகிறோம். தம்பி முத்துக்குமாரின் ஈகத்தையும் அப்படித்தான் நாங்கள் பார்க்கிறோம். முத்துக்குமாரின் சாசனத்தைப் படித்துப் பார்க்கிறபோது அது வெறும் மொழி உணர்வால், இன உணர்வால் பாதிக்கப்பட்டவன் என்று அந்தத் தாக்கத்திற்கு ஆளானவன் என்று ஒரு முடிவுக்கு வரமுடியாது. அவ்வளவு தெளிவான அரசியல் புரிதலோடு எழுதியிருக்கிறான் அவன்.

இந்திய அரசின் தலையீடு எப்படி ஒரு தேசிய இனத்தின் இறையாண்மையின் மீது தாக்குதல் நடத்துகிறது என்கிற புரிதல் அவனுக்கு இருந்தது. அதுதான் முக்கியமானது. தமிழர் இறையாண்மையைப் பற்றிய புரிதல் அவனுக்கு இருக்கிறது. தேசியஇன அரசியலைப் பற்றிய புரிதல் அவனுக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல் வெறும் மொழி உணர்வால், இன உணர்வால் ஒரு தேசத்தை வென்றெடுத்துவிட முடியாது. அப்படியொரு நாடு விடுதலையடைந்து விட முடியாது. இந்த இறையாண்மையைக் குறித்த பார்வை தம்பி முத்துக்குமாருக்கு இருந்தது.

### குற்ற உணர்வு

நான் அவ்வப்போது நினைத்துப் பார்ப்பேன், எனக்குள் ஒரு குற்ற உணர்வு. அந்த நான்கு நாள் போராட்டத்தின் போதும் மறைமலைநகரில் அவன் உடனிருந்தான் என்பது பிறகுதான் நான் தெரிந்துகொண்டேன். வன்னி அரசு ‘அந்தத் தம்பியை உங்களுக்குத் தெரியவில்லையா? அவ்வப்போது வந்து உங்களைப் பார்ப்பார், நான்கு நாட்கள் உங்களோடுதான் இருந்தார்’ என்று சொன்னபோதுதான் எனக்குத் தெரிந்தது. ஒருவேளை அந்தப் போராட்டம் ஐந்தாவது நாள், ஆறாவது நாள், ஏழாவது நாள் என்று தொடர்ந்திருந்தால் அந்தத்

தம்பி நம்மோடு களத்தில் இருந்திருப்பார் அல்லது உயிரோடு இருந்திருப்பார். அந்தப் போராட்டமும் முடிந்துபோனது என்கிற நிலையில் அவனுக்கொரு விரக்தி ஏற்பட்டு, இனி எப்படித்தான் தமிழினத்தின் கவனத்தை ஈர்க்க முடியும் என்று யோசித்த நிலையில், விரக்தியின் விளிம்பிற்கே சென்ற நிலையில் அவன் எடுத்த ஒரு தீவிரமான முடிவு தான் 'தன்னைத்தானே மாய்த்துக்கொள்வது' என்கிற முடிவு என்று நான் யோசித்துப் பார்க்கிறேன். அதனால், எனக்குக் குற்ற உணர்வு ஏற்படுகிறது.

**தமிழ்த்தேசிய எழுச்சிய மாநாடு**

தம்பி முத்துக்குமாரின் ஈகம் உணர்ச்சி வயப்பட்ட ஒன்றல்ல. அறிவு பூர்வமானது, கொள்கைப் பிடிப்புடையது, அரசியல் புரிதலுடையது, இந்தியப் பேரரசின் வல்லாதிக்கத்தை எதிர்க்கக்கூடியது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அரசியல் சார்ந்த புரிதலோடு அவன் அணுகியிருக்கிறான் என்பதை உணர்த்தக்கூடியது. அப்படிப்பட்ட அந்த மாவீரனின் ஈகத்தைப் போற்றுவோம். இனி ஆண்டுதோறும் இந்தப் பகுதியில் நமது தோழர்கள் அவருடைய நினைவுநாளில் இதைப் பெரும் நிகழ்வாக ஒருங்கிணைக்க வேண்டும் என்பதை ஒரு வேண்டுகோளாக விடுத்து, இப்போது நான் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன்.

உண்மையான தமிழ்த்தேசியத்தை வென்றெடுக்கும் ஆற்றல் பெற்றவர்கள் விடுதலைச் சிறுத்தைகள்தான் என்பதை உணர்த்தக்கூடிய வகையில் விரைவில் 'தமிழ்த்தேசிய எழுச்சிய மாநாடு' தமிழ்நாடு தழுவிய அளவில் நடைபெறும் என்பதை அறிவிக்கிறேன். 'தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு' எந்தத் தேதியில் நடைபெறும் என்பது உயர்நிலைக்குழுவில் பேசி பின்னர் அறிவிப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நமக்கு தேர்தல் இரண்டாம் பட்சம்தான். நம்முடைய கருத்தியல்தான் முதலாவது என்பதை இந்த நேரத்தில் சொல்லி இந்தத் தேர்தல் நெருங்கும் சூழலில் விடுதலைச் சிறுத்தைகள் முன்னெடுக்கும் 'தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு' விரைவில் நபைெறும் என்பதை தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.


நமது **தமிழ்மண்**

**அடித்தட்டு மக்களை அரசியல்படுத்தும் கருத்துவெளி**

பிப்ரவரி 2026
தமிழ் 20 | மண் 224

ஆசிரியர் - வெளியிடுபவர்
**முனைவர் தொல்.திருமாவளவன்**

பொறுப்பாசிரியர்
**பூவிழியன்**

ஒளி அச்சு
**கவினி**

இதழ் வடிவமைப்பு
**நீல.தமிழேந்தி**
**மெய்யருள்**

மெய்ப்பு
**தமிழன் இளங்கோ**

புகைப்படங்கள்
**சூம் எழில்இமயன்**

பதிவு முகவரி:
எல்.ஐ.ஜி அடுக்ககம்,
எண்: எல் - 12பி, தரைத்தளம்,
சர்வமங்களா குடியிருப்பு,
அசோக் நகர், சென்னை 600 083
பேச: 97878 54141

மின்னஞ்சல்:
thamizhmannvck@gmail.com

இணையதளம்
www.thamizhmann.in
www.namadhuthamizhmann.blogspot.com

தனி இதழ் : ரூ.15
இதழ் வளர்ச்சி நிதி : ரூ.2000
(ஐந்தாண்டுகள்)
NAMADHU THAMIZHMANN
எனும் பெயரில் வரைவோலை(DD)


**மாமனிதர் ஆர்.என்.கே மறைவு:**

**எளிமைச்செம்மல் ‘ஆர்.என்.கே’ அவர்களின் மறைவால் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டுநிரப்ப இயலாது!**

# இந்திய ஒன்றிய அரசு அவருக்கு ‘பாரத ரத்னா’ விருது வழங்கிச் சிறப்பிக்க வேண்டும்!

**எழுச்சித்தமிழர் வலியுறுத்தல்**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவரும் இந்திய விடுதலைப் போராட்ட வீரருமான தகைசால் தமிழர் அய்யா ஆர்.என்.கே அவர்களின் மறைவு மிகுந்த துயரமளிக்கிறது. அவர் நூறாண்டுகள் வாழ்ந்து நிறைவாழ்வை அடைந்தவர் என்றாலும், அவரது மறைவு நெஞ்சைக் கனக்கச் செய்கிறது. மாபெரும் கொள்கைக் குன்றம் சரிந்தது! மகத்தான எளிமையின் சிகரம் சாய்ந்தது! அரசியல் தூய்மையின் பேரொளி மறைந்தது! பாட்டாளிகளின் உற்றத் தோழரின் மறைவு எவராலும் ஈடுசெய்ய முடியாதது! உழைக்கும் மக்களின் பாதுகாப்புப் பேரரணாக வாழ்ந்து மறைந்த மாமனிதர் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு எமது செம்மாந்த வீர வணக்கம்!



அவருடையவயதும்இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் வயதும் ஒன்றே என்பது அவருக்கு வாய்த்த — தன்னியல்பாக அமைந்த ஒரு மகத்தான பெருமையாகும். அவர் இந்திய விடுதலை போராட்டத்தில் பள்ளிப் பருவத்திலேயே பங்கேற்று சிறைபட்டு ஈகம் புரிந்தவர். ஆங்கிலேய வல்லாதிக்க ஆட்சியாளர்கள் அவருக்குச் சொல்லொணா கொடுமைகளை இழைத்தனர். மிடுக்கான தோற்றம் கொண்ட அவரது மீசையைத் தீயால் சுட்டுப் பொசுக்கிய கொடூரத்தையும் அரங்கேற்றினர். அதிலிருந்து அவர் மீசை வைப்பதைக் கைவிட்டார் என்பது நம் கண்ணீரை உகுக்க செய்யும் குரூரமான வரலாறாகும்.

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியில் இணைந்து களமாடிய அவர்மீது “நெல்லை சதி வழக்குப்” புனையப்பட்டது. அதனையொட்டி சிறைப் படுத்தப்பட்ட அவர் சந்தித்த அடக்குமுறைகள் ஏராளம். சாதி,மதம் கடந்து உழைக்கும் மக்களை அமைப்பாக்கி அவர்களை அரசியல் படுத்தி வர்க்க விடுதலைக்கான புரட்சியை முன்னெடுக்க வேண்டுமெனபதில் தீவிரம் காட்டியவர். எளிமையான பொதுவாழ்வு; வலிமையான போர்க் குணம்; உறுதியான கொள்கைப் பிடிப்பு; பக்குவமான அணுகுமுறை போன்றவையே அவரது அடையாளங்கள் ஆகும்.

விடுதலைச் சிறுத்தைகளின் மீது பேரன்பைப் பொழிந்தவர். எப்போதும் என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கப் படுத்தியவர். சிறுத்தைகளின் “அம்பேத்கர் சுடர்” விருதினைப் பெற்றுக் கொண்டு எமக்குப் பெருமை சேர்த்தவர். “தகைசால் தமிழர்” என தமிழ்நாடு அரசால் — மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பாராட்டப்பெற்ற பெருந்தகை ஆவார்.




**இந்திய பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவர் ‘அம்பேத்கர் சுடர்’ அய்யா ஆர்.நல்லகண்ணு அவர்கள் வயது முதிர்வின் காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில், 25.02.2026 அன்று 101வது வயதில் இயற்கை எய்தினார். தகவல் அறிந்த உடனே எழுச்சித்தமிழர் அவர்கள் மருத்துவமனைக்குச் சென்று எளிமைச்செம்மல் அவர்களின் திருவுடலுக்கு மாலை வைத்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் அஞ்சலி செத்தினார்.**

பொதுவாழ்வில், குறிப்பாக தேர்தல் அரசியல் களத்தில் இத்தகைய ‘தூய்மைமிகு பேராளுமை’ இனி எப்போது வாய்க்கும் என்னும் ஏக்கமே மிஞ்சுகிறது. ‘எளிமைச்செம்மல்’ அய்யா நல்லகண்ணு அவர்களின் மறைவால் அரசியல் களத்தில் உருவாகியுள்ள வெற்றிடத்தைக் காலத்தாலும் இட்டு நிரப்ப இயலாது.

அவரது திருவுடல் அரசு மரியாதை யுடன் நல்லடக்கம் செய்யப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது பெரும் ஆறுதல் அளிக்கிறது. இச்சூழலில் தமிழ்நாடு அரசுக்கும் மாண்புமிகு முதலமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்திய ஒன்றிய அரசு அவரது ஈகம் நிறைந்த பொதுவாழ்வையும்; தேசத்தின் விடுதலைக்கான அறப்போராட்டத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பையும் போற்றும் வகையில் அவருக்கு தேசத்தின் உயரிய விருதான ‘பாரத ரத்னா’ விருதினை வழங்கிச் சிறப்பிக்க வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

முதுபெரும் தலைவர் தோழர் ஆர்என்கே அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினர் உள்ளிட்ட உற்றார் உறவினர்களுக்கும் பொதுவுடைமை இயக்கத் தோழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**அறிக்கை | 25.02.2026**

தம்பி பாவரசு மறைவு:

# இயக்கத்தையும் என்னையும் ஆழமாக நேசித்தவர்! 35 ஆண்டுகளாக எனது பணிச்சுமைகளைப் பகிர்ந்துகொண்டவர்!

**ஓய்வின்றி உழைத்த போராளிக்கு எழுச்சித்தமிழர் அஞ்சலி**



கட்சியின் மூத்த முன்னோடியும் முதன்மைச்செயலாளருமான தம்பி ஏ.சி. பாக்கியம் என்கிற ஏ.சி. பாவரசு அவர்கள் இன்று விடியற்காலை இயற்கை எய்திய தகவல் மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்னர் மதுரைக்குச் சென்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த அவரைப் பார்த்தேன். மருத்துவர்களிடம் அவரது உடல்நிலை குறித்து விசாரித்தேன்.

சிறுநீரகம் பாதிக்கப்பட்டு குருதியில் கலந்துள்ள உப்பை நீக்கும் சிகிச்சை அளிக்கப் பட்டு வருவது பற்றியும், இதயம் உள்ளிட்ட பிற உறுப்புகளின் செயல்திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பது பற்றியும், அவர் உயிருக்குப் போராடும் நிலையில் இருப்பது பற்றியும் மருத்துவர்கள் என்னிடத்தில் விளக்கினர். இந்நிலையில், அவரைக் காப்பாற்றுவது கடினம் என்பதை அறிந்தேன். அதனால் மென்மேலும் வேதனை மிகுந்தது. அங்கிருந்து என்னால் நகர இயலவில்லை. எனினும், என்னை நானே தேற்றிக்கொண்டு பாவரசிடம், “தைரியமாக இருங்கள்; மீண்டு வந்து விடுவீர்கள்” என்று கூறினேன். அப்போது அவர் மெல்லத் தலையசைத்தார். என்னிடம் ஏதோ பேச முயன்றார்; ஆனால், அவரால் இயலவில்லை. பின்னர், அவரது மகள் மற்றும் உறவினர்களிடம் நான் ஆறுதலாகப் பேசிவிட்டு விடைபெற்றேன்.

எப்படியும் நலம்பெற்று வருவார் என்று நம்பிக்கொண்டிருந்த நிலையில், இடி விழுந்ததைப் போல இப்படியொரு செய்தி இன்று அதிகாலையில் வந்து சேர்ந்தது. இந்த அதிர்ச்சியிலிருந்து எப்படி மீளுவேன்; என்னை நானே தேற்றிக்கொள்வேன் என்று எனக்குத் தெரியவில்லை. 1990 களின் தொடக்கத்திலிருந்து என்னோடு பயணித்தவர்களுள் ஒருவர் தம்பி பாவரசு. என்னையும் இயக்கத்தையும் ஆழமாக நேசித்தவர். ஓய்வின்றி உழைத்த போராளி. கட்சிப் பணிகள் மட்டுமே அவரது முழுநேரப் பணிகள் என என்னோடு கடந்த 35 ஆண்டுகளாகச் சுற்றிச் சுழன்று தமிழ்நாடு முழுவதும் களமாடியவர்.

மறைந்த தோழர் உஞ்சை அரசன் அவர்களும் இவரும் ‘இரட்டையராக’ இருந்து அனைத்து மாவட்டங்களிலும் பயணம் செய்து இயக்கத்தை முறைப்படுத்தும் பணிகளை ஆற்றியவர்கள். எனக்கு உற்றத்துணையாக இருந்து இயக்கப் பணிகளைப் பகிர்ந்து கொண்ட இருவருமே இன்று இல்லை என்பது எனக்கு நேர்ந்த ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாகும்.

தம்பி பாவரசு அவர்கள், 1991இல் மதுரை அழகர் திருவிழாவில் ‘தண்ணீர் பீய்ச்சும்’ ஒரு பக்தராக எனக்கு அறிமுகமானார். அதன்

பின்னர், அந்த நிலையிலிருந்து முற்றாக மாறி, முழுநேர சிறுத்தையாகப் பரிணாமம் பெற்று, கட்சியில் படிப்படியாகப் பல்வேறு பொறுப்புகளை வகித்து இன்று முதன்மைச் செயலாளர் என்கிற நிலைக்கு உயர்ந்தார்.

அவர் பயணிக்காத மாவட்டம் இல்லை; சந்திக்காத பொறுப்பாளர்கள் இல்லை என்கிற அளவுக்கு அவரது களப்பணிகள் அமைந்தன. உட்கட்சி முரண்களைச் சரிசெய்வது உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளிலும் தானே முன்வந்து தலையிட்டு தீர்வுக் காண்பதில் அக்கறை செலுத்தியவர். மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போதெல்லாம் முழுமையாக என்னோடு இருந்து இரவு பகல் கண்துஞ் சாமல் பணியாற்றியவர்.

தற்போதைய மறுசீரமைப்பு நடவடிக்கை களிலும் அவரது பங்களிப்பு மகத்தானதாகும். கடந்த சில மாதங்களாக உடல்நலம் சீராக இல்லாத நிலையிலும் இயக்கத்தின் மறு சீரமைப்புக்கான பணிகளை ஆற்றுவதில் எனக்குப் பெருந்துணையாக இருந்தார். ஓய்வெடுக்கச் சொல்லியும் அதனைப் பொருட்படுத்தாமல் எனக்கு உடனிருந்து உதவியவர்.

எனக்கு எந்த நெருக்கடியும் தராமல் கட்சியின் நலன்களை மட்டுமே முன்னிறுத்தி தன்னால் இயன்ற அளவில் மக்கள் பணியாற்றியவர். அவரது இழப்பு ஈடுசெய்ய இயலாத மிகப்பெரும் இழப்பாகும். நன்றிப் பெருக்கோடு அவருக்கு எனது செம்மாந்த வீரவணக்கத்தைச் செலுத்துகிறேன். அவரை இழந்து வாடுகிற அவரது மகள் செந்தமிழ் நிலா உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் யாவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அறிக்கை | 24.02.2026**

## இரயில்வே துறை அமைச்சரிடம் எழுச்சித்தமிழர் கோரிக்கை



**‘கடந்த ஆண்டு ஜூன் மாதம் புதுதில்லி மதராசி முகாம் குடியிருப்புகள் அகற்றப்பட்டதால் வசிப்பதற்கு வீடின்றித் தவித்து வரும் 181 தமிழ்க் குடும்பத்தினருக்கு உடனடியாக தற்காலிகக் குடியிருப்புகளை வழங்க வேண்டும்’ என்னும் கோரிக்கையை மனுவை 12.02.2026 அன்று மாண்புமிகு இரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களைச் சந்தித்து வலியுறுத்தினார் எழுச்சித்தமிழர். உடன் வி.சி.க பொதுச்செயலாளரும் விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவிக்குமார்.**




# அம்பேத்கரின் சிந்தனைகள் கிராமங்கள்தோறும் போய்ச் சேரவேண்டும்!

முனைவர் தொல்.திருமாவளவன்

**சென்னை எழும்பூர் அருங்காட்சியக அரங்கத்தில் 31.01.2026 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ‘ஜெய்பீம் ஃபவுண்டேஷன்’ சார்பில் துணைப் பொதுச்செயலாளர், எழுத்தாளர் கவுதம சன்னா தொகுப்பில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்தும் 50 தொகுதிகளாகத் தொகுக்கப் பெற்று ‘அம்பேத்கரியம் 50’ எனும் பெயரில் வெளியிடப் பெற்றது. இந்நிகழ்வில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

இந்த வெளியீட்டு விழாவை மிகச் சிறப்பாக ஒருங்கிணைக்க வேண்டுமென்று எண்ணியிருந்தோம். அதுவும் ஒரு கனவுத்திட்டம் என்று சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கொண்டு இதை வெளியிட வேண்டும்; சில அமைச்சர் பெருமக்களையும் இந்த நிகழ்ச்சிக்கு அழைக்கவேண்டும்; மேடையில் அமர்ந்திருக்கிற ஐ.ஏ.எஸ் அதிகாரி அ.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட அறிவார்ந்த பல ஆளுமைகளையும் அழைத்திட வேண்டும் என்கிற ஒரு திட்டம் நமக்கு இருந்தது.

ஆனால், கவுதம சன்னா அவர்களுக்கு ஏற்பட்ட மனஅழுத்தத்தின் விளைவாக காலம் தாழ்த்துவது ஏற்புடையதல்ல; விரைந்து இதனை வெளியிட்டால்தான் எனக்குள்ள அழுத்தம் குறையும் என்று அவர் திடுமென எடுத்த முடிவின் அடிப்படையில் அவசரக் கோலத்தில் இந்நிகழ்வு ஒருங்கிணைக்கப்பெற்று இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக நாம் அறிவிப்பு செய்தவுடன், அதாவது, 2022ஆம் ஆண்டு மே மாதம் இந்த அறிவிப்பைச் செய்தோம்.



உடனடியாக ஆர்வம் கொண்டு தோழர்கள் 12 ஆயிரம் செலுத்தியவர்கள் 450 பேர். நான்காயிரம் செலுத்தியவர்கள் 274 பேர். இப்போது அறிவித்துக்கொண்டு தங்களை இணைத்துக் கொண்டவர்கள் 32 பேர். ஆகமொத்தம் 756 பேர்தான் இந்தத் திட்டத்தில் இணைந்திருப்பவர்கள். இவர்கள் செலுத்திய தொகை ஐம்பது தொகுதிகளையும் அச்சிட்டு வெளியே கொண்டு வருவதற்குப் போதுமான தொகையல்ல. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு ‘இன்னும் 10 லட்சம் தேவைப்படுகிறது; அச்சகத்தாருக்குத் தரவேண்டும், அது பெரும் நெருக்கடியாக இருக்கிறது’ என்று என்னிடம் அவர் கேட்டபோது என்னால் அந்தப் பணத்தைத் தர இயலவில்லை. ‘எந்தக் கணக்கிலும் பணம் இல்லை; திடீரென நான் எப்படி 10 இலட்சம் தரமுடியும்?’ என்று கைவிரித்துவிட்டேன். ஒருமுறைக்கு பலமுறை என்னை வந்து பார்த்து மறுபடியும், மறுபடியும் ‘ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள்’ என்றார். என்னால் அதைச் செய்ய முடியவில்லை. இது முக்கியமான பணி, செய்துதான் தீரவேண்டும்; ஆனாலும் முடியவில்லை. பிறகு, அவர் கேட்பதை நிறுத்திவிட்டார்; என்னைத் தொந்தரவு செய்யவில்லை.

### தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்

பொருளாதார ரீதியாக அவர்கள் எதிர்கொண்ட அந்தச் சிக்கல்களை யெல்லாம் என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அச்சிடுவதற்கு எவ்வளவு செலவாகும் என்பது குறித்து அவர் விவரித்துச் சொன்னார். ஆனால், இந்தப் புத்தகங்களை நாம் அப்படி இலாபம் பெறும் நிலையில் விலையை நிர்ணயிக்கவில்லை. தொடக்கத்தில் அம்பேத்கருடைய பணியை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிற பணியை நாம் செய்கிறபோது அதில் எந்த வியாபார நோக்கமும் நமக்குத் தேவையில்லை. அடக்கச்செலவு என்னவோ அந்தச் செலவை மட்டும் தோழர்களிடத்தில் நாம் கேட்டுப்பெற்றால் போதும் என்று சொன்னதும் அவர் எடுத்த எடுப்பிலே இந்த 50 தொகுதிகளுக்கும் 12 ஆயிரம் செலுத்தினால் போதும்; அடக்கச்செலவு அவ்வளவுதான். அப்படித்தான் இதை நிர்ணயித்தோம். இப்போது, 23,600 பக்கங்களை 50 தொகுதிகளாகப் பதிப்பித்திருக்கிறார். ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் என்றால்கூட தோராயமாக 24 ஆயிரம் ரூபாய் இந்த 50 தொகுதிகளுக்கும் தரவேண்டும். ஆனால், முழுமையாக 12 ஆயிரம் ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு 24 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களை நாம் இப்போது பதிவு செய்துகொண்டவர்களுக்கு வழங்கவிருக்கிறோம். இந்த அடிப்படையை தோழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

### அம்பேத்கருடைய எழுத்துகளும் பேச்சுகளும்

ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்துகிற போது நிதி தேவைப்படுகிறது. அந்த நிதியை நாம் பொதுவாகப் பலரிடமிருந்தும் திரட்டுகிறபோது கட்டாயமாக இப்படிப்பட்ட வதந்திகள் பரவும், அவதூறுகள் பரவும். யாரேனும் ஒருவர் அந்தக் கோணத்தில் ஒரு கருத்தைச் சொன்னால், அது அப்படியே வேகமாகப் பரவிவிடும். எனவே, இவர் முதலில் என்னிடத்தில் பேசியபோது ஒரு தயக்கம் இருந்தது. ‘அம்பேத்கருடைய எழுத்துகளும் பேச்சுகளும் தொகுக்கப்பட்டு தமிழில் 37 தொகுதிகளாக வந்துவிட்டன. அதை மறுபடியும் நாம் தொகுத்து என்ன செய்யப்போகிறோம்’ என்கிற குழப்பம் எனக்கு இருந்தது. முதல் முதலில் அவர் என்னிடத்தில் சொன்னபோது, நான் அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. மறுபடியும் அவர் வந்து என்னிடத்தில் பேசியதும், அவருடைய இல்லத்திற்குச் சென்று ‘அதைப்பற்றி விளக்கிச் சொல்லுங்கள்’ என்று கேட்டேன். அப்படி அவர் சொன்னபோது அதில் உள்ள பிரச்சினையை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஒரு நூலைத் தொகுப்பதில்கூட சில வழிகளைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான் வாசிப்பவர்களுக்கு எளிதாக இருக்கும், இலகுவாக இருக்கும், புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை அது தரும் என்பதை அவரோடு உரையாடிய

பிறகுதான் நான் புரிந்துகொண்டேன். ஏற்கெனவே, வெளிவந்த நூல்களைத் தொகுத்திருக்கிறார் என்று மேலோட்டமாக நான் சிந்திக்கக்கூடும்; ஆனால், அப்படியில்லை. கால வரிசைப்படி அதைத் தொகுக்க வேண்டும். அவருடைய சிந்தனைகள் எப்படி, என்ன பொருளின்கீழ் இதுவரையில் தொகுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்து, சாதியம் என்றால் அவை அனைத்தும் ஒரே தலைப்பின்கீழ் தொகுக்கப்பெற வேண்டும். பொதுவான ஒரு தலைப்பை இட்டு புத்தகம் வெளிவரும். ஆனால், அதில் கலந்து பல தலைப்புகளில் அவருடைய எழுத்துகள் பதிவாகியிருக்கும். பொருளாதாரம் தொடர்பான கட்டுரைகள் இருக்கும், சாதியம் தொடர்பான கட்டுரைகளும் இருக்கலாம், வெவ்வேறு காலகட்டத்தில் பேசியவைத் தொகுக்கப்பட்டிருக்கலாம். இதை எவ்வாறு தொகுத்தார்கள் என்பது குறித்து நூலிலும் பதிவு செய்திருக்கிறார், என்னிடத்திலும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

**அம்பேத்கர் அவர்கள் விரும்பியபடி தொகுத்தல்**

மராட்டிய மாநில அரசு முதலில் எவ்வாறு அதைத் தொகுக்க முயன்றது, பிறகு அது எப்படித் தொய்வடைந்தது. வி.பி.சிங் அவர்களும், இராம்விலாஸ் பாஸ்வான் அவர்களும் மேற்கொண்ட முயற்சி, 'Ambedkar Foundation' என்கிற ஒரு அமைப்பை நிறுவி மறுபடியும் அவர்கள் அவற்றைத் தொகுக்க எடுத்துக்கொண்ட முயற்சி, அந்தப் பணிகளில் ஏற்பட்ட தொய்வு. இதனால், ஒரு முறைப்படுத்தப்பட்ட தொகுப்புகளாக அவை இல்லை. எனவே, படிக்கிறவர்களுக்கும் அதில் ஒரு குழப்பம், ஒரு தேக்கம் உருவாகலாம். எனவே, அம்பேத்கர் அவர்கள் விரும்பியபடி இவற்றைத் தொகுக்க வேண்டும். அவரே அப்படி தன்னுடைய குறிப்புகளில் பதிவுசெய்திருக்கிறார் என்பதையெல்லாம் எடுத்துரைத்தார். அதன்பிறகுதான் 'சரி அந்த வேலையைச் செய்வோம். அதற்கு என்ன செலவாகும்? அதை எப்படித் திரட்ட முடியும்' என்று சொன்னபோதுதான், ஒவ்வொருவரும் இப்படி புத்தகங்களை வாங்க அழைப்பு விடுக்க வேண்டும். முன்பணம் செலுத்தி முன்வெளியீட்டுத் திட்டம் என்கிற அடிப்படையில் பணம் செலுத்தச் சொன்னால் பலர் அதற்குத் தயாராக முன்வருவார்கள். அது ஒரு கட்சியின் திட்டமாகவே அறிவிக்கப்பட்டால் கட்சியின் முன்னணித் தோழர்கள் அதில் பங்கேற்க வாய்ப்புகள் இருக்கின்றன' என்று இருவரும் சேர்ந்து பேசியபோது அந்தக் காலம் என்னுடைய 60வது அகவை நிகழ்வுகளை ஒருங்கிணைத்துக் கொண்டிருந்த நேரம்.

**அம்பேத்கர் படிப்பகம்**

அப்போதுதான் நான் சொன்னேன், 'ஒருவர் 50 புத்தகங்களை வாங்கிக் கொண்டுபோய் வீட்டில் வைத்தால் அவரும் தொடமாட்டார், யாரும் தொட மாட்டார்கள். அந்த 50 தொகுதிகளையும் ஒரு ஊரில் படிப்பகத்தை உருவாக்கி, அந்தப் படிப்பகத்தில் வைத்துவிட்டார்கள் என்றால் அங்குள்ள மாணவர்கள் படிப்பகத்தில் போய் அமர்கிறபோது அவர்கள் குறைந்தபட்சம் 'அம்பேத்கர்' என்ற பெயரைப் படிக்கட்டும், அவருடைய படத்தைப் பார்க்கட்டும், அவருடைய எழுத்துகள் பொருள் புரிகிறதோ இல்லையோ படித்து அந்த வார்த்தைகளை உச்சரிக்கட்டும். 'சமூகநீதி' என்கிற சொல்லை, 'சமத்துவம்' என்கிற சொல்லை, 'சுதந்திரம்' என்கிற சொல்லை பள்ளி மாணவர்கள், பள்ளி வயதிலே படித்து அந்தச் சொற்களை உச்சரிப்பதற்கான வாய்ப்பாகக்கூட அது அமையட்டும். அவர்கள் பள்ளிப் பருவத்தைத்தாண்டி கல்லூரிப் பருவத்திற்கு வருகிறபோது மீண்டும் அப்புத்தகங்களை அவர்கள் தேடிப்போகிற ஒரு சூழல் கனியும். அதைப் படிக்கவேண்டும் என்கிற ஓர் ஆர்வம் அவர்களுக்கு எழும். எனவே, அம்பேத்கர் சிந்தனைகள் மட்டுமின்றி தந்தை பெரியாரின் சிந்தனைகள் அடங்கிய நூல்களையும், மாமேதை காரல்மார்க்ஸ் சிந்தனைகள் அடங்கிய நூல்களையும் ஒவ்வொரு கிராமத்திலும்



‘அம்பேத்கரியம் 50’ நூல்களின் தொகுப்பாசிரியர் எழுத்தாளர் கௌதம சன்னா அவர்களுக்கு ஆடை போர்த்தி வாழ்த்தும் எழுச்சித்தமிழர்.

படிப்பகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும். அது நம்முடைய கடமையாக அமையவேண்டும். அது எனது கனவுத்திட்டமாகவும் இருக்கிறது’ என்று சொன்னேன். 1990களின் தொடக்கத்தில் மதுரையில் நான் நம்முடைய தோழர்களிடத்தில் சொன்னது நினைவுக்கு வந்து அவரிடத்தில் சுட்டிக்காட்டினேன். ‘அம்பேத்கர் படிப்பகம்’ என்கிற ஒரு சிந்தனை.

### விளங்க வைப்போம்; விலங்கறுப்போம்

ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் குடியிருப்புகளில் ஒரு கூரைக் குடிசையாவது நிறுவி, அதில் 50 மாணவர்கள் அமரக்கூடிய அளவுக்கான ஏற்பாட்டைச் செய்து ‘அம்பேத்கர் குழந்தைகள் படிப்பகம்’ என பலகை வைத்து, அந்தப் பிள்ளைகளை மாலை நேரத்தில் அங்கே அமரவைக்க வேண்டும். அம்பேத்கர் படத்தை அவர்கள் அந்தப் படிப்பகத்தில் பார்க்கவேண்டும் என்ற கனவுஎனக்குஇருந்தது.அதனடிப்படையில் மதுரை தல்லாகுளத்தில் நான் முதன்முதலில் அம்பேத்கர் படிப்பகத்தை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டேன். அப்போது ஒரு முழக்கம் எழுதினேன். “விளங்க வைப்போம்; விலங்கறுப்போம்” என்கிற முழக்கத்தை நான் எழுதினேன். அவர்களுக்குத் தெளிவுபடுத்தினால் அவர்களைப் பீடித்திருக்கிற விலங்குகள் தானாக நொறுங்கிப் போகும் என்கிற அடிப்படையில் அந்த முழக்கத்தை நான் 90களின் தொடக்கத்தில் (91, 92) காலகட்டத்தில் எழுதிக்கொடுத்தேன்.

அதனடிப்படையில் உருவானதே கரும்பாலையில் குழந்தைகள் படிப்பகம். அதற்கடுத்து எஸ்.எம்.பி. காலனியில் உருவானது ஒரு படிப்பகம். அதன்பிறகு மஞ்சள்மேடு பகுதியில் உருவானது ஒரு படிப்பகம். இவையெல்லாம் 91, 92 காலகட்டங்களில் நான் எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாக அம்பேத்கர் குழந்தைகள் படிப்பகம் மதுரை மண்ணில் உருவானது. இந்த 50 தொகுதிகள் அடங்கிய புத்தகத்தை வாங்கக்கூடியவர்கள், அவர்களுக்கு மட்டும் என்று இல்லாமல்,

அவர்கள் கிராமத்தில் ஒரு படிப்பகத்தைக் கட்டக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு நாம் வழிகாட்ட வேண்டும். அந்தப் படிப்பகம் இந்த மூன்று மாமனிதர்களின் புத்தகங்களைக் கொண்ட ஒரு நூலகமாகவும் அது மாறவேண்டும்.

அரசு ஊழியர்களாக இருப்பவர்கள் இது வெறும் 12 ஆயிரம் ரூபாய்தானே. அவர்கள் ஐந்து கிராமங்களைத் தத்தெடுக்க முடியும், 10 கிராமங்களைத் தத்தெடுக்க முடியும். மாதம் பல இலட்சம் சம்பளம் வாங்கக்கூடியவர்கள் ஒரேயொரு முறை 1 இலட்சத்து 20 ஆயிரம் செலுத்தி 10 கிராமங்களுக்கு 10 தொகுப்புகளை அவர்களால் ஏன் பெற முடியாது? எனவே, அப்படியொரு திட்டத்தை நாம் அறிவிக்கலாம் என்கிறபோதுதான் சன்னா அவர்கள் சிந்தித்து உருவாக்கியது ஒரு கிராமத்தைத் தத்தெடுப்பவர்களுக்கு ஒரு தூதுவர் பட்டம், ஐந்து கிராமங்களை தத்தெடுப்பவர்களுக்கு ஒரு தூதுவர் பட்டம், அம்பேத்கர் சிந்தனைகளை எடுத்துச்செல்கின்ற தூதுவர்களாக அவர்களை அடையாளப்படுத்துவது என்று இப்படியொரு ஒரு திட்டங்களை அறிவித்து நாம் இதைத் தொடங்கினோம்.

**மணிவிழாக் கனவுத்திட்டம்**

ஆயிரக்கணக்கில் வந்து சேர்வார்கள் என்றுதான் நான் எதிர்பார்த்தேன். ஆறாயிரம் கிராமங்கள் என்று நான் சொன்னதற்குக் காரணம் தமிழ்நாட்டில் 12,800 ஊராட்சிகள் இருக்கின்றன. அவ்வளவு ஊராட்சிகளிலும் நம்மால் அதனை சாதிக்க முடியாவிட்டாலும் 50 சதவிகிதம் கிராமங்களிலாவது ஒரு ஆறாயிரம் கிராமங்களில் படிப்பகங்களை நிறுவி எந்த ஊருக்குச் சென்றாலும் அம்பேத்கர் படிப்பகம், அது எப்படி இருக்கவேண்டும், எத்தனை சதுர அடியில் இருக்கவேண்டும், புத்தகங்களை எங்கே வைக்கவேண்டும், படிப்பதற்கான மேசைகளை எங்கே போடவேண்டும் என்பதைக்கூட ஒரு வீடியோ தயாரித்து அதையும் நாம் பகிர்ந்துகொண்டோம். அம்பேத்கர் படிப்பகத்திற்கான ஒரு மாதிரியை வடிவமைத்து அதை ஒரு வீடியோவாகத் தயாரித்து நாம் அனுப்பினோம். ஆகவேதான், இதை கவுதம சன்னா அவர்கள் 'மணிவிழாக் கனவுத்திட்டம்' என்று அறிவித்தார். என்னுடைய மணிவிழா கொண்டாடியபோது நான் இதை முன்மொழிந்த காரணத்தினால் இதை 'மணிவிழாக் கனவுத்திட்டம்' என்று அறிவித்தார். 2022இல் அறிவிக்கப்பட்டு இன்றைக்கு 2026இல்தான் இந்தப் புத்தகங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், சில மாதங்களுக்கு முன்பு, இங்கே சன்னா சொன்னதைப் போல இலண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், அதுவும் மணிவிழா நிகழ்ச்சிதான். இலண்டன் வாழ் தமிழர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள், அங்கே குடியிருக்கக் கூடியவர்கள் ஒன்றுசேர்ந்து நடத்திய ஒரு விழா. அந்த மணிவிழாவில் இந்த 50 நூல்களையும் அங்கே வெளியிட்டோம்.

**'புத்தரும் அவரது தம்மமும்' நூல் நிகழ்த்திய மாற்றம்**

'அம்பேத்கரியம் வழிகாட்டி' என்கிற ஒரு நூலை சன்னா அவர்கள் இந்த 50 நூல்களுக்கும் எழுதிய முன்னுரை தொகுக்கப்பெற்றது. அந்த முன்னுரைகளுக்கு ஒரு முன்னுரை எழுதியிருக்கிறார். அந்த முன்னுரையைத்தான் நான் முழுமையாக இங்கே அமர்ந்து படித்தேன். கிட்டத்தட்ட ஒரு சிறிய தன்வரலாறாகப் பதிவு செய்திருக்கிறார். தொடக்கத்தில் அவர் ஒரு கிறித்தவர். அவர் தேவாலயங்களுக்குச் செல்வதைக் கடமையாகக் கொண்டிருந்தார். பிறகு அதில் ஏதோவொரு சலிப்பு ஏற்பட்டு இந்துக்கோயில்களுக்குச் செல்லக் கூடியவராக மாறியிருக்கிறார். அதிலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் சலிப்பு ஏற்பட்டு அவர் எழும்பூரில் உள்ள புத்த விகாரில் தோழர் அன்பன் மூலமாகத் தன்னை பௌத்தராக மாற்றிக்கொண்டார். அதற்கு அவர் முதன்முதலில் படித்த 'புத்தரும் அவரது தம்மமும்' என்கிற நூல்தான் காரணம் என்பதைப் பதிவு செய்திருக்கிறார். ''எனக்குள் இருந்த வெற்றிடத்தை அந்த நூல் நிரப்பியதாக

நான் உணர்ந்தேன். எனக்கு கடவுள் நம்பிக்கை என்பதைவிட ஏதோ ஒரு வெற்றிடம் ஆன்மிகம் தொடர்பாக இருந்தது; நிறைய கேள்விகள் இருந்தன. 'புத்தரும் அவரது தம்மமும்' என்கிற நூலைப் படித்ததும் நான் தேடிய விடை அதில் இருந்ததாக உணர்ந்தேன். எனவே, அடுத்த நாளே நான் புத்தவிகாருக்குச் சென்று என்னை பௌத்தராகப் பதிவு செய்துகொண்டேன். அதுதான் என்னுடைய பெயர் 'கவுதம சன்னா' என்பது பௌத்த பெயர்." அவருடைய இயற்பெயர் மைக்கேல் என்று நான் கேள்விப்பட்டேன்.

### உறுப்பினர் சேர்க்கை எனும் சவால்

இப்படி ஆன்மிகத்தளத்தில் இருந்தவர் பிறகு நாத்திகச் சிந்தனைகளுக்கு உரியவராக மாறி, பௌத்தம் என்றாலே கடவுள் மறுப்புக் கோட்பாட்டைக் கொண்டதுதான்.பிறகுஇடதுசாரிகளோடு, மார்க்சிய லெனினியவாதிகளோடு நெருக்கம் ஏற்பட்டு; பிறகு அம்பேத்கர், பெரியார், மார்க்ஸ் நூல்களையெல்லாம் தேடிதேடிப் படித்து ஒருவழியாக சிறுத்தையாய் தன்னை அடையாளப் படுத்திக்கொண்டார். விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். அவர் இணைந்தபிறகு எடுத்த முதல் சவால் உறுப்பினர் சேர்க்கை. அதில் அவர் காட்டிய தீவிரம், அவர் ஆற்றிய பணி, அதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி என்றென்றும் நம்மால் மறக்க இயலாது. அதற்காக இன்றைக்கும் அவரைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பணிகளைத் தொடர்ந்து எல்லாக் கிராமங்களுக்கும் சென்று நாம் தீவிரப்படுத்தி உறுப்பினர் அட்டையை வழங்கியிருந்தால் அடுத்தகட்டம் சென்றிருக்கும். கிட்டத்தட்ட 45 இலட்சம் பேர் உறுப்பினர்களாகத் தங்களை இணைத்துக்கொண்டதாக அன்றைக்கு நமக்குப் படிவங்கள் கட்டுக்கட்டாக வந்து சேர்ந்தன. இவர் காட்டிய வழிகாட்டுதலின் அடிப்படையில். ஆனால், அந்தப் படிவங்களின் அடிப்படையில் யாருக்கும் அப்போது நம்மால் உறுப்பினர் அட்டைகளை வழங்க முடியாமல் போய்விட்டது.

அதன்பிறகு அவருடைய ஆற்றலைப் புரிந்துகொள்வதற்கு ஒரு அரிய வாய்ப்பு பண்டிதர் அயோத்திதாசருடைய 'தமிழன்' இதழுக்காக நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு மலர் தயாரிக்கவேண்டும் என்று நான் விரும்பினேன். ஒரு நாள் அழைத்துச் சொன்னேன், 'இனி இதை யாரிடத்தில் ஒப்படைக்க முடியும், உங்களால் செய்ய முடியுமா?' என்று கேட்டேன். பெரிய வியப்பு, 10 நாள்கூட இடைவெளி இல்லை. அந்தப் பத்து நாள்களில் 80 அல்லது 90 பக்கங்களில் மிகச்சிறப்பாக ஒரு மலரைத் தயாரித்துக் கொண்டுவந்து கொடுத்தார். அது மிகச்சிறப்பான ஒரு ஆவணம். அயோத்திதாச பண்டிதரைப் பற்றிய அடிப்படையைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் அந்த மலரைப் படித்தால் போதும். ஏனென்றால், அவர் பண்டிதரைக் குறித்த ஆய்வுகளை நிறைய செய்திருக்கிறார். நூல்களையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். ஆகவே, அவருடைய பங்களிப்புகளில் மலர் தயாரிப்பு என்பது போற்றுதலுக்குரிய ஒன்றாக இருந்தது.

### அளப்பரிய பணி இது

ஏன் புரட்சியாளர் அம்பேத்கர் 65 வயதில் காலமாகநேர்ந்தது.மிகக்கடினமாக அவர் மூளையைப் பயன்படுத்தினார் என்பதுதான். அதற்காக நிறைய படிக்க நேர்ந்தது, படித்தார். படித்ததோடு வெறும் படிப்பாளியாக அவர் நின்றுவிடவில்லை. ஆழச் சிந்தித்தார்; ஒரு சிந்தனையாளராகப் பரிணமித்தார். ஒரு சிந்தனையாளராக இருந்து தன்னை ஒரு அறிவுஜீவி என்று காட்டிக்கொண்டு மேடைப்பேச்சுகளோடு நின்றுவிடவில்லை. காலத்தால் அழியாத இந்தச் சிந்தனைகளை எழுத்துப் பூர்வமாக்கினார். அவ்வளவையும் எழுதினார். அதைப்போல அந்த எழுத்து களையெல்லாம் முறைப்படுத்துவது, காலவரிசைப் படுத்துவது,பொருளுக்கேற்ப, தலைப்புக்கேற்ப அவற்றையெல்லாம் மாற்றி, மாற்றி தொகுப்பது, ஓரிடத்தில் தொகுத்ததை இன்னொரு இடத்தில் மீள்பதிப்பாகாமல் பார்த்துக்கொள்வது

என்பது மிகக் கடினமான ஒரு வேலை. ஆகவே, அப்படிப்பட்ட அளப்பரிய பணியை அவர் மேற்கொண்டது அவருடைய ஆற்றல் எத்தகையது என்பதை நமக்கு உறுதிப்படுத்துகிறது. அது விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருக்கிறது என்பதை மகிழ்வோடு நான் பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்கு ஒரு மிஷன் உருவாகவில்லை**

மார்க்சியம்; அது ஒரு அறிவியல் என்று இடதுசாரி இயக்கங்கள் மக்களிடையே கொண்டு செல்வதைப் பார்க்கிறோம், பரப்புவதைப் பார்க்கிறோம். அதைப்போல காந்தியடிகளின் சிந்தனைகளை 'காந்தியம்' என்று பெயரிட்டு அவருடைய அகிம்சைக் கோட்பாடு, அவருடைய கிராமப்புற ஆட்சி நிர்வாகம் 'இராமராஜியம்' என்கிற கோட்பாடு, அவருடைய மது விலக்குக் கொள்கை, இப்படி பல சிந்தனைகளை காந்தியமாகத் தொகுத்து அதை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கிற ஒரு வெகுமக்கள் இயக்கம், தொடர் இயக்கம் இந்த மண்ணில் நிகழ்ந்தது, நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

விவேகானந்தர், அவருடைய சிந்தனைகளைப் பரப்புவதற்கு 'ராமகிருஷ்ணா மிஷன்' என்கிற ஒன்றை உருவாக்கி, இன்றைக்கு அது உலகளாவிய அளவில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கல்வி நிறுவனங்களை நிறுவி அதன் மூலமாக கல்வியைப் போதிக்கிற அதே வேளையில் விவேகானந்தரின் சிந்தனைகளையும் அவர்கள் ஒரு இசமாக இந்துயிசமாகப் பரப்புகிறார்கள். சீர்திருத்தம் செய்யப்பட்ட ஒரு இசமாக அவர்கள் பரப்புகிறார்கள்.

பெரியாரியம்கூட இன்றைக்கு திராவிடர் கழகத்தின் மூலம், சுய மரியாதைப் பிரச்சாரத்தின் மூலம் மீண்டும், மீண்டும் நூல்களாகப் பதிப்பிக்கப்பெற்று, பல பத்தாண்டுகளாக தமிழ்மண்ணிலும், உலகத்தின் பிறபகுதிகளிலும் பரப்பப்பட்டு வருகிற ஒரு மிஷன் இயங்குகிறது. நான் அடிக்கடிச் சொல்வேன், அம்பேத்கரின் சிந்தனைகளைப் பரப்புவதற்கு அப்படியொரு மிஷன் உருவாகவில்லை. ஆங்காங்கே இயக்கங்களாக, சமூக இயக்கங்களாக அல்லது அரசியல் கட்சிகளாக அம்பேத்கர் பெயரை உச்சரிக்கக்கூடிய நிலையில்தான் இருக்கிறோம். அவர்களுடைய சிந்தனைகளுக்கு ஒரு வடிவம் கொடுத்து 'அம்பேத்கரியம்' என்கிற அடையாளத்தோடு வெகு மக்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிற பணி செய்வதற்கான ஒரு மிஷன் இங்கே இல்லை என்று நான் தோழர்களோடு உரையாடுகிறபோது கவலையோடு பகிர்ந்துகொள்வது உண்டு.

**அம்பேத்கரியம்**

சனநாயகம் என்பது அரசியல் சனநாயகம், சமூக சனநாயகம், பொருளாதார சனநாயகம் என்று சன நாயகத்தைப் பாகுபடுத்தி வகைப்படுத்தி காட்டுகிறார். இங்கே 'ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒரு வாக்குக்கு ஒரு மதிப்பு என்கிற அரசியல் சனநாயகத்தை நான் கொண்டுவந்துவிட்டேன். ஆனால், சகோதரத்துவம் இல்லாத ஒரு நிலையில் இங்கே சமூக சனநாயகம் இல்லை. சமூக சனநாயகம் இல்லாமல் வெறுமனே அரசியல் சனநாயகம் எதையும் சாதிக்காது; புதிய இந்தியாவை உருவாக்காது' என்று அவர் மனம் நொந்தார். அதற்கும் ஒரு தீர்வைச் சொன்னார். அதுதான், 'நீ இந்துவாக இருக்கிற வரையில் இதிலே கிடந்து உழல நேரும். நீ இந்து அல்ல என்று உணர்; வெளியேறு' என்று சோன்னார். இவற்றையெல்லாம் தொகுத்தால் இதுதான் அம்பேத்கரியம்.

இந்த அடிப்படையில் உருவாக வேண்டிய ஒது புதிய இந்தியாதான் 'சமத்துவ இந்தியா'. அவருடைய மொழியில் சொன்னால், பௌத்த இந்தியா. அம்பேத்கர் கண்ட கனவு அது மதம் சார்ந்தது அல்ல; பௌத்தம் சார்ந்தது. ஏனென்றால், பௌத்தத்தில் எந்தப் புராணங்களும் கதையாடல்களும் கிடையாது. கற்பனைகள், புனைவுகள் கிடையாது. அது தனிநபர் ஒழுக்கத்தையும், சமூக ஒழுக்கத்தையும் முற்போக்கான திசைவழியில் காட்டுகிற வாழ்வியல்



**மேனாள் நீதியரசர் சந்துரு, ஆர்.பாலகிருஷ்ணன், இ.ஆ.ப.(ஓய்வு), சி.பி.ஐ.எம் மூத்த தலைவர் சி.மகேந்திரன், வி.சி.க பொதுச்செயலாளர் ம.சிந்தனைசெல்வன், ச.ம.உ., தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் சுபாஷினி.**

முறை அது. அது சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது, சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. அப்படிப்பட்ட ஒரு புதிய இந்தியாவைக் கட்டமைக்க கனவு கண்டார். அந்தக் கனவு நனவாக வேண்டுமானால் அம்பேத்கரின் சிந்தனைகள் கிராமங்கள்தோறும் போய்ச் சேரவேண்டும். அதற்காக நாம் முன்மொழிந்த முழக்கம்தான், ‘ஊர்தோறும் அம்பேத்கர் படிப்பகம்; ஊன்றுவோம் அம்பேத்கர் அறிவியம்’ என்பதாகும்.

ஆகவே, அடுத்த தலைமுறையினர் அம்பேத்கரை அறியாத ஒரு தலைமுறையினராக உருவாகக்கூடாது. அம்பேத்கரைப் படிக்கிற தலைமுறை உருவானால் இந்த மண்ணில் நீண்ட நெடுங்காலம் புரையோடிக் கிடக்கிற சமத்துவமின்மை என்கிற நிலை தகர்த்தெறியப்படும். சகோதரத்துவமின்மை என்கிற நிலை தகர்த்தெறியப்படும். பிறப்பின் அடிப்படையிலான உயர்வு—தாழ்வு என்கிற இந்தப் பாகுபாடுகள் தகர்த்தெறியப்படும். இல்லையேல் வலதுசாரிகளின் ஆதிக்கம் மேலோங்கும். வர்ணாசிரம தர்மம் நம்மை மீண்டும் ஆட்கொல்லும். பழைய சமூக ஒழுங்கு மறுபடியும் நிலைநிறுத்தப்படும்.

எனவேதான், நீங்கள் அம்பேத்கருக்கு நன்றி செலுத்த விரும்பினால் உங்கள் பிறந்த ஊரில் ஒரு அம்பேத்கர் படிப்பகத்தை உருவாக்குங்கள். அந்தப் படிப்பகத்தில் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை காரல்மார்க்ஸ் ஆகியோரின் சிந்தனைகள் அடங்கிய நூல்களை அவர்களுக்குக் கொடையாக அளியுங்கள். அந்தப் பிள்ளைகள் அவற்றை புரட்டிப் பார்க்கட்டும். அவற்றை அந்தப் பருவத்தில் படித்துப் புரிந்துகொள்ள முடிகிறதோ இல்லையோ அந்தச் சொற்றொடர்கள் அவர்களுக்கு அறிமுகமாகட்டும். அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். எத்தனை சதி முயற்சிகளை வலதுசாரிகள் மேற்கொண்டாலும்கூட அவற்றை எதிர்த்துப் போரிடக்கூடிய போர்க்குணம் வாய்ந்த போராளிகள் உற்பத்தியாவார்கள். சமத்துவத்தை நாடுகிற சமூகப் புரட்சியாளர்கள் உருவாவார்கள். அம்பேத்கரைப் படித்தவர்களின் எண்ணிக்கை மிகமிகச் சொற்பம்.

அம்பேத்கர் இயக்கங்களை நடத்தியவர்களோ அம்பேத்கரைப் புரிந்துக்கொண்டது மிகமிகச் சொற்பம். அம்பேத்கர் பெயரை உச்சரிக்கக் கற்றுக்கொண்டோமே தவிர அம்பேத்கரின் சிந்தனைகள் என்ன என்கிற அந்த உள்ளடக்கத்தை இன்னும் உள்வாங்கவில்லை. அந்தக் கோணத்தில் புரட்சியாளர் அம்பேத்கரை உள்வாங்கிக் கொண்டால் அடுத்தடுத்து வருகிற தலைமுறையினர் ஒரு புதிய இந்தியாவை, சமத்துவ இந்தியாவை, சகோதரத்துவ இந்தியாவை உருவாக்குவார்கள் என்கிற நம்பிக்கை உள்ளது.

அதற்கு இந்தத் திட்டம் ஒரு அடித்தளம் அமைக்கும் என்று நான் நம்புகிறேன். எனவே, முழு அளவில் பணம் செலுத்தியவர்கள் வைரத் தூதுவர்களாக, தங்கத் தூதுவர்களாக மாற முன்வரவேண்டும். அவரவர் சொந்த ஊரில் முதலில் ஒரு படிப்பகத்தை நீங்களே கட்டுவதற்கு முயற்சிக்க வேண்டும். குறைந்தது 4 இலட்சம் ரூபாய் செலவில் 400 சதுர அடி அளவில் ஒரு படிப்பகத்தைக் கட்ட முடியும். இவ்வளவு தூரம் அரசு வேலை வாய்ப்பைப் பெற்று, 30 அல்லது 35 ஆண்டுகள் அரசு சம்பளத்தைப் பெற்று தன்னுடைய குடும்பத்தைப் பாதுகாக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்கள் அம்பேத்கருக்கு திருப்பிச் செலுத்துகிற ஒரு நன்றிக்கடனாக அது அமையட்டும்.

அதுதான் உங்களுக்கு நான் விடுக்கிற வேண்டுகோள். அந்தக் கனவுத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக தனது முழு ஆற்றலையும் இதற்காக செலவிட்ட, அதனால், சற்று உடல்நலிவைச் சந்திக்கிற நிலைக்கு ஆளாகியிருக்கிற கவுதம சன்னா அவர்கள் விரைந்து நலம்பெற வேண்டும். அவர் இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் உள்ளன என்பதைச் சொல்லி, அவருக்கு எமது நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் கூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.

## ‘அம்பேத்கரியம் 50’ நூல்களை அறிமுகம் செய்யும் முதலமைச்சர்:




**சென்னை, தலைமைச் செயலகத்தில் 26.02.2026 அன்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் முனைவர் கௌதம சன்னா அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் எழுத்துக்கள் பேச்சுக்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை தொகுத்து வழங்கியுள்ள "அம்பேத்கரியம் 50" நூல்களை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் முன்னிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.எஸ்.பாலாஜி, தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் முனைவர் க.சுபாஷினி, மருத்துவர் பாலகுமாரன், திரு.மாணிக் ராஜேந்திரன் மற்றும் திரு.பார்த்திபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.**

## ‘சமத்துவம் காண்போம்’ கருத்தரங்கம்: எழுச்சித்தமிழர் பங்கேற்பு



சென்னை, சமூகப் பணிப் பள்ளியில் 28.01.2026 அன்று “Elimination of Global Caste and Analogous Systems of Social Hierarchies” என்னும் தலைப்பில் Asia dalit rights forum, National Campaign on dalit human rights, Global forum of communities discriminated on work and descent, Centre for social justice and equity, Madras school of social work ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றினார் எழுச்சித்தமிழர்.

## எழுச்சித்தமிழர் தலைமையில் மண்டலப் பொறுப்பாளர்கள் கூட்டம்:



விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மண்டலப் பொறுப்பாளர்கள் கூட்டம் எழுச்சித்தமிழர் தலைமையில் சென்னை அம்பேத்கர் திடலில் 26.01.2026 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மண்டலச் செயலாளர்கள், மண்டலத் துணைச்செயலாளர்கள் உள்ளிட்ட கட்சியின் முன்னணி நிர்வாகிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இந்நிகழ்வில், மண்டலப் பொறுப்பாளர்களுக்கான களப்பணிகள் குறித்த வழிகாட்டுதலை வழங்கினார் எழுச்சித்தமிழர்.



தாய்ச்சொல் :

# திரிபுவாதங்களுக்கும் அவதூறுகளுக்கும் இடம்தரக் கூடாது!

முனைவர் தொல்.திருமாவளவன்
வேண்டுகோள்

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளுக்கு வணக்கம்!

தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது. ஊடகங்கள் அனலை ஊதி ஆதாரமில்லாத ஊகங்களையெல்லாம் பரபரப்புக்குரிய செய்திகளாக்குவதில் தீவிரம் காட்டி வருகிறது. இச்சூழலில் சில கருத்துகளைத் தங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். குறிப்பாக, தேர்தல் குறித்து நமது கட்சி எத்தகைய நிலைபாட்டை மேற்கொண்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன்.

கடந்த கால்நூற்றாண்டு காலத் தேர்தல் அரசியலில் நாம் ஒருபோதும் தேர்தல் ஆதாயங்களை மட்டுமே கருத்தில் கொண்டு, அதாவது, வெற்றி தோல்விகளைக் கணக்கில் கொண்டு முடிவெடுத்ததில்லை. கருத்தியலின் அடிப்படையில் இணக்கமான கட்சிகளோடு தேர்தல் உறவுகளைத் தீர்மானித்துக் கூட்டணி அமைத்திருக்கிறோம். தி.மு.க மற்றும் காங்கிரசு ஆகிய கட்சிகளோடு கடந்த காலங்களில் நாம் முரண்பட்டு எதிர்நிலையில் நின்றிருக்கிறோம். ஆனால், தற்போதைய சூழலில் தேசம் தழுவிய அளவில் நிலவிவரும் தீங்கு நிறைந்த சனாதன அரசியலின் சதியை முறியடிக்க வேண்டிய தேவையை உணர்ந்து, தி.மு.க தலைமையிலான 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில்' நாம் அங்கம் வகித்துச் செயலாற்றி வருகிறோம்.

ஏற்கனவே, 2001 மற்றும் 2011 சட்டமன்றத் தேர்தல்களில் தி.மு.க தலைமையிலான கூட்டணியில் நாம் இடம் பெற்றிருக்கிறோம். 2011இல் அமைந்த தி.மு.க கூட்டணியில் வி.சி.க.வும் பா.ம.க.வும் இடம் பெற்றிருந்தன. ஆனால், அத்தேர்தலில் தி.மு.க கூட்டணி வெற்றி வாய்ப்பை இழக்கும் நிலை ஏற்பட்டது.

அதன்பின்னர், பா.ம.க எடுத்த 'சோசியல் எஞ்சினியரிங்' என்கிற 'சாதி அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தும் தேர்தல் உத்தியைக்' கையில் எடுத்தபோது தமிழக அரசியல் களம் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியது. அதன்பின்னர்

தான் நாம், ‘பா.ஜ.க.வுடன் மட்டுமின்றி பா.ம.க.வோடும் இனி தேர்தல் உறவு இல்லை’ என்கிற நிலைபாட்டை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

2016 இல் இடதுசாரிகள் மற்றும் ம.தி.மு.க ஆகிய தோழமைக்கட்சிகளோடு இணைந்து ‘மக்கள் நலக் கூட்டணி’ அமைத்து அப்போதைய சட்டமன்றப் பொதுத்தேர்தலைச் சந்தித்தோம். வெற்றி வாய்ப்பை இழந்தோம். அதன்பின்னர் காவிரி நீர்ச் சிக்கலையொட்டி தி.மு.க முன்னெடுத்த முயற்சியின் அடிப்படையில் ஒருங்கிணைந்து களமாடினோம். அதுவே ‘மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி’யாகப் பரிணமித்தது.

2017இலிருந்து இக்கூட்டணி கருத்தியல் அடிப்படையில் களம் பல அமைத்துப் போராடி வருவதுடன், அடுத்தடுத்து சில தேர்தல்களையும் சந்தித்து சாதனை களைப் படைத்து வருகிறது. குறிப்பாக, 2021 சட்டமன்றத் தேர்தல், 2024 நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் என இக்கூட்டணி தொடர்ச்சியாக மக்களின் நல்லாதரவோடு வெற்றிகளைப் பெற்று வருகிறது. தற்போது 2026 சட்டமன்றத் தேர்தலைச் சந்திக்கவுள்ளது.

மதச்சார்பின்மை, சமத்துவம், மாநில உரிமைகளை நிலைநாட்டும் பரந்துபட்ட நோக்கத்தில் தெளிவான கொள்கை அடிப்படையில் அமைக்கப் பட்டுள்ளதுதான் தி.மு.க தலைமையிலான ‘மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி’ என்பதை நாடறியும். கடைசி நிமிடத் தொகுதிப் பங்கீட்டுக்காகத் தேர்தல் நேரத்தில் அமைக்கப்படும் கூட்டணி என்பதாக இல்லாமல், மதவெறி சக்தி களையும் அவர்களோடு கைகோர்த்துள்ள இன்னபிற கட்சிகளையும் வீழ்த்தும் வகையில் இந்தக் கூட்டணியை அமைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று வெற்றிகரமாக வழிநடத்தி வருகிறார்.

அந்த வகையில் நாம் அவருக்கு உற்ற துணையாக இந்தக் களத்தில் கைகோர்த்து நிற்கிறோம்.

பா.ஜ.க தலைமையிலான ‘தேசிய ஜனநாயகக் கூட்டணி’யில் இடம் பெற்றுள்ள அ.தி.மு.க உள்ளிட்ட அரசியல் கட்சிகளோடு, நாம் இத்தகைய கொள்கை அடிப்படையில் தான் முரண்பாடு கொண்டுள்ளோம். அதனடிப்படையில் நமது கருத்துகளையும் வெளிப்படுத்தி வருகிறோம். மற்றபடி தனிப்பட்ட முறையில் தனிநபர் யார்மீதும் அல்லது எந்தவொரு கட்சியின்மீதும் நமக்கு காழ்ப்புணர்வு இல்லை. குறிப்பாக, பா.ஜ.க மற்றும் பா.ம.க ஆகிய கட்சிகளை அந்த வகையில்தான் மதிப்பீடு செய்து இந்த நிலைபாட்டை மேற்கொண்டுள்ளோம்.

ஆனால், வன்னியர் சமூகத்தைச் சார்ந்த வெகுமக்களுக்கு எதிராக நாம் முடிவெடுத்ததைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கிட சிலர் முயற்சிக்கின்றனர். அதேபோல பா.ஜ.க.வை விமர்சித்தால் ஒட்டுமொத்த இந்துச் சமூகத்துக்கும் நாம் எதிரானவர்கள் என்பதைப்போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்கிட சனாதன சக்திகள் முயற்சிக்கின்றனர். உண்மையில் குறிப்பான ஒரு சாதியினருக்கோ அல்லது ஒரு மதத்தினருக்கோ எதிராக நமது கட்சி சிந்தித்ததுமில்லை; செயல்பட்டதுமில்லை!

தமிழ்நாட்டைச் சூழும் சனாதன ஃபாசிச சக்திகளை வீழ்த்துவதே நமது இலக்காகும். அவ்வாறு அவர்களை வீழ்த்துவதற்குரிய வெற்றி வியூகத்தை வகுத்து நமது கூட்டணியைத் தலைமையேற்று வழிநடத்தி வரும் தி.மு.க தலைவர் அண்ணன் ஸ்டாலின் அவர்களின் அளப்பரிய முயற்சிக்கு அனைத்து வகையிலும் ஒத்துழைப்போம். மதச்சார்பற்ற முற்போக்குச் சக்திகளின் வெற்றிக்குத் தீவிர முனைப்போடும் மிகுந்த அர்ப்பணிப்போடும் களப்பணி ஆற்றுவோம்!

இந்நிலையில், திரிபுவாதங்களுக்கும் அவதூறுகளுக்கும் இடம் தரும் வகையில் நமது இயக்கத் தோழர்களின் கருத்துகள் அமைந்துவிடக் கூடாது என வேண்டுகோள் விடுக்கிறேன்.

**07.02.2026**



சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட சுவாமி சகஜானந்தா வரவேற்பு நுழைவு வாயிலை எழுச்சித்தமிழரும் மாண்புமிகு வேளாண்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களும் இணைந்து திறந்துவைத்தனர்.



காட்டுமன்னார்கோயில் வட்டம் ரெட்டியூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்கினார் எழுச்சித்தமிழர்.

## சிதம்பரம் தொகுதிப்பணியில் நாடாளுமன்ற உறுப்பினர்




சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சிறுகாட்டூர், பாளையங்கோட்டை, குமாரக்குடி ஆகிய கிராமங்களில் புதிதாகக் கட்டப்பட்ட நியாய விலைக்கடைகளைத் திறந்து வைத்தார் எழுச்சித்தமிழர்.



சுவாமி சகஜானந்தா மணிமண்டபத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களின் பிறந்த நாளில் (27.02.2026) அவரின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார் எழுச்சித்தமிழர்.






சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட குமராட்சி - கீழவன்னியூரில் உள்ள புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நுழைவு வாயில் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார் எழுச்சித்தமிழர்.

## முனைவர் தொல்.திருமாவளவன் | 27.01.2026





கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அருகே அமைந்துள்ள தாய்த்தமிழுக்காக தன்னுயிர் நீத்த மொழிப்போர் தியாகி இராசேந்திரன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தினார் எழுச்சித்தமிழர்.




# சிறுத்தைகள் இருக்கும் வரையில் பெரியாரியத்தை வீழ்த்த முடியாது!

**எழுச்சித்தமிழர் ஆவேசம்**

**சென்னை, சர்.பி.டி. தியாகராயர் அரங்கில் 23.01.2026 அன்று தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஒருங்கிணைத்த "ஆரிய அடிவருடிகளும் திராவிடக் கோட்டையும்" என்னும் சிறப்பு மாநாட்டில் ஆற்றிய உரையின் சுருக்கம்:**

என் உயிரின் உயிரான விடுதலைச் சிறுத்தைகளே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவார்ந்த வணக்கம்.

தந்தை பெரியார் திராவிடர் கழகம் இன்றைய முக்கியத்துவம் வாய்ந்த சூழலில், சட்டப்பேரவைத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிற சூழலில், சனாதன சக்திகள் இந்த மண்ணை ஆக்கிரமிக்கத் துடித்துக்கொண்டிருந்த இந்தச் சூழலில் 'பெரியாரின் அரசியலை எந்தச் சக்தியாலும் வீழ்த்த முடியாது' என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தச் சிறப்பு மாநாட்டை ஒருங்கிணைத்திருக்கிறது. இதில் பங்கேற்று உரையாற்றக்கூடிய ஒரு வாய்ப்பை எமக்கு வழங்கியமைக்காக அண்ணன் கோவை கு.இராமகிருஷ்ணன் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் உரித்தாக்குகிறேன்.

பெரியார் அகில இந்திய அளவில் — சொல்லப்போனால் உலக அளவில் இன்றைக்கு மிக முக்கியமான பேசுபடு பொருளாக விளங்குகிறார். அவர் எந்த அதிகாரத்திலும் இருந்ததில்லை. ஆட்சியதிகாரப் பீடத்தில் அமராமலேயே ஆட்சியில் இருந்தவர்களால், இருப்பவர்களால் வெகுவாகப் பேசப்படுகிற ஒரு



பேராளுமையாக விளங்குபவர் தந்தை பெரியார். புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள்கூட மிகப்பெரும் பொறுப்புகளில் இருந்திருக்கிறார். இந்திய ஆட்சியதிகாரப் பீடத்தில் அதிகாரம் வாய்ந்த பொறுப்பில் இருந்து பணியாற்றி இருக்கிறார். அரசியல் நிர்ணய சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சபையில் அரசமைப்புச் சட்டத்தை எழுதுவதற்கான குழுவின் தலைவராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றியிருக்கிறார்.

## தந்தை பெரியார் மட்டும்தான்

புரட்சியாளர் அம்பேத்கரைப்போல அரசியல் தளத்தில், ஆட்சியதிகாரத்தில் எந்தப் பொறுப்பையும் வகிக்காமல் இன்றைக்கு மிகப் பெரிய தாக்கத்தை அரசியல் களத்தில் ஏற்படுத்தி வருபவர் தந்தை பெரியார். அதில் அவருக்குள்ள பெரும் சிறப்பு, அருஞ்சிறப்பு 'ஒரு வார்டு உறுப்பினராக வேண்டும் என்றுகூட அவர் விரும்பியதில்லை.' தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்கக்கூடிய அளவுக்கான சூழலும் அவரைத் தேடி வந்தது. ஆனாலும், அதை விரும்பவில்லை. அப்படி அதிகார வேட்கை இல்லாத ஒருவர் பதவிக்காகப் பொதுவாழ்க்கைக்கு வந்து, ஆசைவார்த்தைகளைப் பேசி அரசியல் செய்யவேண்டும் என்கிற நோக்கம் இல்லாத ஒருவர், சாதிய அமைப்பால் பஞ்சமர்களைப்போல எந்த இழிவையும் அவமானத்தையும் சந்திக்காமல் 'சாதியை ஒழிக்கவேண்டும்' என்று போராடிய ஒருவர் தந்தை பெரியார் மட்டும்தான். இது இந்திய அரசியலில் அவருக்குரிய தனிச்சிறப்பு.

அவர் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர், ஓரளவுக்கு இந்துச்சமூகக் கட்டமைப்பில் தகுதி உண்டு என்கிற ஒரு சாதிய அடையாளத்தோடு பிறந்தவர். அதாவது, தமிழகத்தில் தொட்டால் தீட்டு, கண்டால் தீட்டு என்கிற நிலையில் உள்ள சமூக அடையாளங்கள் அவருக்கு இல்லை. சமூகத்தில் அவருக்கு மதிப்புண்டு என்கிற அளவுக்கான சமூக அடையாளம்; நாயக்கர் என்கிற சமூக அடையாளம். ஆகவே, அவருக்கு எந்த இடத்திலும் கோயிலில் நுழையக்கூடாது, குளத்தில் இறங்கக்கூடாது, செருப்பு அணியக்கூடாது என்கிற நெருக்கடிகள் இல்லை; கட்டுப்பாடுகள் இல்லை; அவமானங்கள் இல்லை; அவமதிப்புகள் இல்லை. அப்படிப்பட்ட ஒரு சமூகத் தகுதியுள்ள குடும்பத்தில் பிறந்தவர். பொருளாதார வசதி படைத்த குடும்பத்தில் பிறந்தவர். பல கோயில்களில் தர்மகர்த்தா பொறுப்பை வகித்த தந்தைக்கு மகனாகப் பிறந்தவர்.

## இறுதிமூச்சுவரை பொதுவாழ்வு

அப்படிப்பட்ட ஒருவர் தனது இறுதிமூச்சுவரை பொதுவாழ்வில் தன்னை ஒப்படைத்துக்கொண்டார் என்றால் அவருடைய உழைப்பையும் ஈகத்தையும் ஒருவன் உள்நோக்கத்தோடு கொச்சைப்படுத்துகிறான் என்றால், அவன் இந்த மண்ணில் தமிழனாக வாழத் தகுதியற்றவன், மனிதனாக வாழத் தகுதியற்றவன் என்றுதான் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பொதுவாழ்க்கைக்கு வரக்கூடிய 100க்கு 99.99 விழுக்காட்டினர் பதவி ஆசை, ஆட்சி அதிகாரத்தின்மீது வேட்கை, அதன்மூலம் கிடைக்கிற புகழ், அதையொட்டி தம்மீது படக்கூடிய வெளிச்சம் என இவற்றிற்காகத்தான் பொதுவாழ்க்கைக்கு வருகிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. அப்படி எண்ணியிருந்தால் காங்கிரசில் அவர் நீடித்திருக்க முடியும். அப்படி அவர் ஆசைப்பட்டிருந்தால் காங்கிரசில் நீடித்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக ஆகியிருக்க முடியும் அல்லது அகில இந்திய அளவில் மிக உயர்ந்த பதவிக்கும் அவர் சென்றிருக்க முடியும். ஆனால், காங்கிரஸ் கட்சியில் நிலவுகிற சனாதனதர்ம அடிப்படையிலான பாகுபாட்டிலிருந்து எதிர்த்து அதிலிருந்து வெளியேறியவர் தந்தை பெரியார். பதவி அவருக்கு முதன்மையானது இல்லை; அவருக்கு அது நோக்கமுமில்லை.

பிறப்பின் அடிப்படையில் உயர்வு—தாழ்வை இங்கே நியாயப்படுத்தக்கூடிய வகையிலான அரசியல் இயக்கங்களும் இருக்கின்றனவா என்கிற நிலையில்

அவர் அதிர்ச்சியடைந்து ‘காங்கிரசுக்குள் நிலவுகிற இந்தப் பாகுபாட்டை காங்கிரஸ் தலைவர்களால் ஒழிக்க முடியாது’ என்பதை உணர்ந்து அதிலிருந்து வெளியேறியவர். ‘காங்கிரசை ஒழித்துக்கட்டாமல் விடமாட்டேன்’ என்று உறுதியெடுத்துக்கொண்டு களமிறங்கியவர் தந்தை பெரியார். அதற்கு ஒரே நோக்கம்தான் சாதியின் பெயரால் அல்லது வர்ணாசிரமத்தின் பெயரால் இந்தச் சமூகத்தில் நிலவுகிற உயர்வு—தாழ்வு என்கிற பாகுபாட்டை எதிர்ப்பது என்பதுதான் அவரின் நோக்கம். பெரியாரை இந்தக் கோணத்தில் மட்டும்தான் பார்க்க வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும். அவருடைய இறுதிமூச்சு வரையில் அவருடைய ஒற்றை நோக்கம், ஒற்றை இலக்கு ‘சாதி ஒழிப்பு’ என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**நாங்கள் வெறும் வாக்குவங்கிக்காக அரசியல் செய்யவில்லை. சில தொகுதிகளுக்காக நாங்கள் அரசியல் செய்யவில்லை. அதிகாரத் தேடலுக்காக அரசியல் செய்யவில்லை.புரட்சியாளரும் தந்தை பெரியாரும் கண்ட கனவை நனவாக்குவதற்காகத்தான் விடுதலைச் சிறுத்தைகள் களத்தில் நிற்கிறோம்.**

சாதியை ஒழிக்கவேண்டும் என்பதற்காகப் பொதுவாழ்க்கைக்கு வந்த தலைவர்கள் இந்தியாவில் அரசியல் களத்தில் இரண்டே தலைவர்கள்தான் ஒருவர் புரட்சியாளர் அம்பேத்கர், இன்னொருவர் தந்தை பெரியார். அவர் அரசியல் இயக்கம் கண்டார், அரசியல் தளத்தில் பணியாற்றினார், மத்திய அமைச்சர் என்கிற அளவுக்கு உயர்பொறுப்பில் இடம் வகித்தார். ஆனாலும், சாதி ஒழிப்பு என்பதுதான் அவருடைய இறுதி இலக்காக இருந்தது. புரட்சியாளர் அம்பேத்கருடைய அணுகுமுறை அனைத்தும் சாதியை ஒழிப்பதற்கான செயல்திட்டங்களைக் கொண்டதாகவே இருந்தது. அப்படி தேர்தல் அரசியல் நாடாளுமன்ற சனநாயகத்தில் ஈடுபாடு கொள்ளாமல் சாதியை ஒழிக்கவேண்டும் என்பதற்காக தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட மாசற்ற தலைவர் தந்தை பெரியார்.

**பார்ப்பனர்களின் கைக்கூலி**

அவர் கன்னடர் அதனால்தான், அவர் தமிழர் என்கிற உணர்வு இங்கே வெகுண்டெழாமல் தடுத்தார். திராவிடர் என்கிற, தமிழர் என்கிற அடையாளம் அழிக்கப்படக்கூடிய வகையில் ‘திராவிடம்’ என்கிற சொல்லாடலைக் கையாண்டார். ‘திராவிடம்’ என்கிற அரசியலைக் கையிலெடுத்தார். அதனால்தான், இங்கே தமிழர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டார்கள்; தமிழர்கள் ஒடுக்கப்பட்டார்கள்; தமிழர்கள் சுரண்டப்பட்டார்கள் என்று உள்நோக்கம் கற்பிப்பது அப்பட்டமான அற்ப அரசியல் அல்லது அவர்கள் பார்ப்பனர்களின் கைக்கூலிகளாக இருக்கவேண்டும் என்பதைத்தவிர வேறெந்த அடிப்படையும் இருக்க வாய்ப்பில்லை.

அவருக்கு சாதியை ஒழிக்கவேண்டும் என்கிற தேவை எங்கிருந்தது வந்தது. அம்பேத்கர் சொல்வதில் ஒரு பொருள் இருக்கிறது. திருமாவளவன் சொல்வதில் ஒரு பொருள் இருக்கிறது. தந்தை பெரியார் ஏன் சாதியை ஒழிக்கவேண்டும் என்று சொன்னார்? இந்தக் கோணத்தில் தோழர்கள் சிந்திக்க வேண்டும். அவர் எதற்காக பார்ப்பனர்களை எதிர்க்கவேண்டும். அதிகாரப்பீடத்தில் ஆதிக்கம் செலுத்துகிற அந்தக் கும்பலோடு கைகோர்த்துக் குலாவ முடியுமே; அவர்களோடு சேர்ந்து ஆனந்தக்கூத்தாட முடியுமே; பதவிகளில் அமர்ந்து பட்டங்களைச் சுமந்து திரியமுடியுமே! ஆனால், ஏன் அதிகாரமும் ஆதிக்கமும் நிறைந்த பார்ப்பனர்களை எதிர்க்கிற நிலைப்பாட்டை தந்தை பெரியார் எடுத்தார். அது வெறும் பார்ப்பனர்

சமூகத்தினர் மீதான வெறுப்பு அல்ல. இந்தச் சமூகத்தில் நிலைகொண்டிருக்கிற ஒரு தத்துவத்திற்கு எதிரான போர்.

**சனாதனக் கோட்பாட்டிற்கு எதிரான போர்**

ஆரியம், பார்ப்பனியம், சனாதனம் என்கிற கோட்பாட்டிற்கு எதிரான போர். இந்த அடிப்படை அறிவு இல்லாதவர்கள்தான் தந்தை பெரியாரை அடையாள அரசியலுக்குள் சுருக்கப் பார்க்கிறார்கள், வீழ்த்தப் பார்க்கிறார்கள். தன்னை 'தமிழன்' என்று சொல்லிக்கொள்வதோ அல்லது 'திராவிடன்' என்று சொல்லிக் கொள்வதோ அல்லது இந்து என்று சொல்லிக்கொள்வதோ அவருக்கு எந்த உடன்பாடும் கிடையாது. எல்லா வரம்புகளையும் கடந்த ஒரு மாமனிதர் தந்தை பெரியார். கற்பனைகளுக்கு ஆட்படாதவர் தந்தை பெரியார். அவர் உலகம் தழுவிய ஒரு பார்வை கொண்டவர். தத்துவார்த்த அடிப்படையோடு சமூகத்தை அணுகியவர். கோட்பாட்டு அணுகுமுறைகளோடு செயல்திட்டங்களை வரையறுத்துக் கொண்டவர்.

தந்தை பெரியார் 'திராவிடம்' என்கிற ஒரு அரசியலை இங்கே முன்னிறுத்தியதற்குக் காரணம் அவர் தமிழர் அல்லாதவர் என்று விளக்கம் சொல்கிறார்கள். 'திராவிடம்' என்பது நிலப்பரப்பையும் குறிக்கும். 'திராவிடம்' என்பது மொழி அடையாளத்தையும் குறிக்கும். ஆனால், இந்த அளவுகோலை தந்தை பெரியார் எடுத்துக்கொள்ளவில்லை. ஐக்கியமாக அமைப்புகளை ஒருங்கிணைப்பதற்கு சென்னை மாகாணத்தில் உள்ள அனைவரும் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒடியா போன்ற மொழிகளைப் பேசக்கூடியவர்கள், சென்னை மாகாணத்திற்குட்பட்டவர்கள் அல்லது அண்டைப் பகுதியில் உள்ள இந்த மொழியைப் பேசக்கூடிய மக்கள் — இவர்களை 'திராவிடர்கள்' என்று அவர் அடையாளப்படுத்தியதுகூட வடஇந்தியர்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குப் பயன்படும் என்கிற வகையிலேதானே தவிர; மொழி அடிப்படையில் அல்ல.

**பிராமணர்களும் ஆரியர்களும்**

அவர் ஒரே நேரத்தில் இரண்டு எதிரிகளை முன்னிறுத்துகிறார். ஒன்று, வடஇந்தியர்களின் ஆதிக்கம்; அதை எதிர்க்கவேண்டும். இரண்டு இந்தியா முழுவதும் ஆக்கிரமித்திருக்கிற சனாதன தர்மத்தை அழித்தொழிக்க வேண்டும். சனாதன தர்மத்தை அழிப்பதற்கு அவர் செயல்திட்டங்களை வரையறுக்கிறபோது அதற்கு அடிப்படையான தத்துவம் என்ன? அதைப் பின்பற்றக்கூடியவர்கள் யார்? அதைக் கட்டிக்காப்பாற்றக் கூடியவர்கள் யார்? அதனால், பயன் பெறக்கூடியவர்கள் யார்? என்று பார்க்கிறபோது, அதனால், பெரும்பயன் அடையக்கூடியவர்கள் ஆரியர்களும், பிராமணர்களும். ஆரியர்களும், பிராமணர்களும் ஒன்று என்று நாம் கருதுவோம். பிராமணர்கள் உள்ளடங்கிய ஆரிய இனம் என்பது பரந்தது. ஆரியர்கள் என்றால் பார்ப்பனர்களை மட்டும் குறிக்காது. பார்ப்பனர்களும் ஆரியர்கள், பார்ப்பனர் அல்லாத பனியாட்களும் ஆரியர்கள் என்றுதான் தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இசுலாமியர்கள்கூட ஈரானிலிருந்து வந்தவர்கள் இன்றைக்கு பார்சி மதம் எங்கள் மதம் என்று சொல்லக்கூடிய அந்த பெர்சியன்ஸ்,அவர்களும்தங்களை ஆரியன் என்றுதான் சொல்லிக்கொள்கிறார்கள். வடஇந்தியாவைச் சார்ந்த வைசியர்களும் தங்களை ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஜெர்மானிய நாட்டைச் சார்ந்த ஹிட்லரும் ஆரியர்தான். ஜெர்மனிய நாட்டைச் சார்ந்தவர்களும் ஆரியர்கள்தான்.

ஆகவே, ஆரியர்கள் என்பது ஒரு பரந்த இனம். ஆரியம் என்பது ஒரு இனம். இந்தியாவில் இரண்டு மனித இனங்கள் உள்ளன. திராவிடர்கள் என்றால் ஆரியர் அல்லாத அனைவரும் திராவிடர்கள்தான். ஆரியர்கள்

பிராமணர்கள் உள்ளிட்ட ஆரியர்கள் அனைவரும் ஆரிய இனம். திராவிடர்கள் பல மொழிகளைப் பேசக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் தமிழ் பேசக்கூடிய பிராமணர்களும் இங்கே உண்டு. ஆகவேதான், மொழி அடிப்படையில் ஒரு ஐக்கியத்தைக் கட்டினால், பார்ப்பனர்களையும் உள்வாங்கக்கூடிய ஒரு நிலை ஏற்படும் என்கிற அச்சம் தந்தை பெரியாருக்கு உண்டு. ஆகவே, எந்த இடத்திலும் பார்ப்பனர்களைத் தனிமைப்படுத்த வேண்டும், அந்நியப்படுத்த வேண்டும், பார்ப்பனர் அல்லாத சமூகத்தினரை ஐக்கியப்படுத்த வேண்டும் என்பது மட்டுமே அவருடைய செயல்திட்டமாக இருந்தது. அதுதான் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம்.

**தேர்தலில் நின்றாலும் நிற்காவிட்டாலும் நாங்கள் இந்த நிலைப்பாட்டில் எப்போதும் உறுதியாக இருப்போம். தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் நாங்கள் இந்தக் கருத்தியல் நிலைப்பாட்டில் எப்போதும் உறுதியாக இருப்போம்!**

மேலோட்டமாகப் பார்த்தால் பார்ப்பனர் மிகவும் சிறுபான்மையினர்தானே, அவர்களுக்கு எதிராக பெரியார் ஏன் அப்படிச் சிந்தித்தார்? அவர்களைத் தனிமைப்படுத்தலாமா? அவர்கள், அப்படி சிறுபான்மை மக்களைத் தனிமைப்படுத்தி, அந்நியப்படுத்தி அவர்களுக்கு எதிரான வெறுப்பை விதைப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்கலாம். அவர்கள் மூன்று சதவிகிதம்தான். ஆனால், அவர்களின் ஆதிக்கம் அகில இந்தியா முழுமைக்கும், அனைத்துத் துறைகளிலும் இருந்தது. அதற்கு எது சாதகமாக இருந்தது என்றால், எண்ணிக்கையில் அவர்கள் மிகவும் சிறுபான்மையினராக இருந்தாலும் அவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இந்த மண்ணில் நிலைப்படுத்தப்பட்டிருக்கிற சனாதன தர்மம்தான் அல்லது பார்ப்பனிய தர்மம்தான் அல்லது மனுதர்மம்தான் அல்லது வர்ணாசிரம தர்மம்தான். இதைக் கண்டுணர்ந்தவர் தந்தை பெரியார். ஆகவே, பார்ப்பனர்களை அந்நியப்படுத்துவது, தனிமைப்படுத்துவது என்கிற துணிச்சலான முடிவை 20ஆம் நூற்றாண்டில் உயர்த்திப் பிடித்தவர் தந்தை பெரியார். இது சாதாரணமான காரியமில்லை. இந்தத் துணிச்சல் எல்லோருக்கும் வந்துவிடாது.

### பெரியாரியத்தை வீழ்த்த முடியாது

சிலர் ஏதோ சில இலாபங்களுக்காக, சில ஆதாயங்களுக்காக 'திருமாவளவன் தி.மு.க.வோடு இருக்கிறான்' என்று கருதுகிறார்கள். இல்லை, பெரியாரின் கருத்துகளுக்கு வலுசேர்க்க வேண்டுமென்கிற தேவையிருக்கிறது. தேர்தல் அரசியலில் இருந்தாலும் இந்தக் கருத்தில் உடும்புப்பிடியாக இருக்கிற இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. இதனால், என்ன பாதிப்பு நேர்ந்தாலும், இழப்பு நேர்ந்தாலும், சேதமடைந்தாலும் அதை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கிற இயக்கம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி. திராவிடர் கழகம், தி.மு.கழகம் என்கிற இரண்டு கட்சிகளோடு பெரியாரின் சிந்தனைகள் பூண்டற்றுப் போய்விடும் என்று கருதிவிடாதீர்கள். சிறுத்தைகள் இருக்கிற வரையில் இந்த மண்ணில் எந்தக் கொம்பனாலும் பெரியாரியத்தை வீழ்த்த முடியாது, அசைக்க முடியாது என்பதை நான் உறுதிப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, அம்பேத்கர் இயக்கம் மட்டுமல்ல; இதுவொரு பெரியார் இயக்கம். எங்களின் அரசியல் ஆதாரமே பெரியாரும் அம்பேத்கரும்தான். அந்த அரசியலுக்கு வேட்டுவைக்கப் பார்க்கிறார்கள். இது இன்றைக்கு நேற்றைக்கு நடப்பதல்ல. பெரியார் வாழ்ந்த காலத்தில் நேருக்கு

நேராகவே அவரை மிகக் கேவலமாக விமர்சித்திருக்கிறார்கள்; எதிர்த்து அரசியல் செய்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாதவர் தந்தை பெரியார்.

**பெரியாருக்கு எதிரான அரசியல்**

இன்றைக்கு இருக்கிற 'விகடன் குழுமம்' அன்றைக்கும் இருந்தது. அவர்கள் பெரியாருக்கு எதிரான அரசியலைச் செய்தார்கள். டி.டி.கிருஷ்ணமாச்சாரி, 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி இந்தப் பெரியவர்கள் எல்லாம் பெரியாருக்கு எதிரான அரசியலை ம.பொ.சி.யைக் கொண்டு செய்தார்கள். ம.பொ.சி.யின் பிள்ளை இன்றைக்கு அப்படியே செய்கிறார்.

அண்ணன் திருமாவளவனும் பெரியார்' என்று சொன்னால் மயங்கிவிடுவார் என்று கருதுகிறார்கள் அல்லது திருமாவளவனை ஆதரிப்பவர்கள் மயங்கிப்போவார்கள் என்று யாரோ சொல்லித் தந்திருக்கிறார்கள். திருமாவளவனும் திருமாவளவனோடு களமாடக்கூடிய எந்தத் தோழனும் அவ்வளவு எளிதாக, இலகுவாக இந்த மாயாஜால வித்தைகளுக்கு ஒருபோதும் மயங்கிவிடமாட்டார்கள் என்பதை நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

நாங்கள் வெறும் வாக்குவங்கிக்காக அரசியல் செய்யவில்லை. சில தொகுதிகளுக்காக நாங்கள் அரசியல் செய்யவில்லை. அதிகாரத் தேடலுக்காக அரசியல் செய்யவில்லை. புரட்சியாளரும் தந்தை பெரியாரும் கண்ட கனவை நனவாக்குவதற்காகத்தான் விடுதலைச் சிறுத்தைகள் களத்தில் நிற்கிறோம். தொடக்கத்திலிருந்து நான் முதன் முதலாக இந்த இயக்கத்தின் தலைமைப்பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து புரட்சியாளர் அம்பேத்கரோடு தந்தை பெரியாரின் திருவுருவப்படத்தையும் பொறித்து, துண்டறிக்கைகளை விநியோகித்து ஒவ்வொரு சேரிக்கும் கொண்டுபோய் சேர்த்தவன் திருமாவளவன். இன்றைக்கு நேற்றைக்கு அல்ல; அன்றைக்கு நான் 'தேர்தல் பாதையே கூடாது' என்று சொன்ன காலம். பத்தாண்டுக்காலம் தேர்தல் பாதையே வேண்டாம் என்று அரசியல் செய்த நேரத்தில் பெரியாரை, புரட்சியாளர் அம்பேத்கரை இருபெரும் ஆளுமைகளை 'கொள்கை ஆசான்கள்' என்று பிரகடனம் செய்தவன் திருமாவளவன். பலபேர் விமர்சனம் செய்தார்கள். நான் அதைப் பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. அதே அடிப்படையில்தான் இன்றைக்கு நாங்கள் இயங்கிக்கொண்டிருக்கிறோம்.

**திராவிடம் என்பதை வெறும் மொழி அடையாளமாகப் பார்க்கவில்லை**

உத்தரபிரதேசத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, பீகாரிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது, அகில இந்திய அளவிலும், உலக அளவிலும் சுயமரியாதை குறித்த விவாதம் இன்றைக்கு உயர்த்திப் பிடிக்கப்படுகிறது. அரசியல் களத்தில் சுயமரியாதையை ஒரு பேசுபடும் பொருளாக்கியவர், ஒரு விவாதத்திற்குரிய கோட்பாடாக மாற்றியவர். 'சுயமரியாதை' என்கிற இந்தச் சொற்றொடரை அரசியல் அரங்கில் புழக்கத்திற்குக் கொண்டு வந்தவர், அறிமுகப்படுத்தியவர் தந்தை பெரியார். திராவிடம் என்பதை வெறும் மொழி அடையாளமாகவோ, நிலப்பரப்பு என்கிற அடையாளமாகவோ தந்தை பெரியார் பார்க்கவில்லை.

நாடு மொழி அடிப்படையில் பிரிந்த பிறகு தெலுங்கர்கள் யாரும் இங்கே குடியேறவில்லை. மொழிவாரி மாகாணம் பிரிந்தபிறகு மலையாளிகள் இங்கே குடியேறவில்லை. இன்றைக்கு வடஇந்தியர்கள் குடியேறுகிறார்கள். தொழிலாளிகள் என்கிற பெயரில் இங்கே வந்து அமர்கிறார்கள். மார்வாடிகள் விடுதலைக்குப் பிறகு பலபேர் வந்திருக்கிறார்கள். மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு பல பேர் புலம்பெயர்ந்து அமர்ந்திருக்கிறார்கள்; இதுவேறு.

ஆனால், மதராஸ் மாகாணமாக இருந்தபோதே இந்த மொழியை பேசக்கூடிய அந்தந்தப் பகுதிகள்

பிறகு, ஆந்திராவாக. முதலில் பிரிந்தது ஆந்திராதான். மொழி அடிப்படையில் ஒரு மாகாணம் பிரிந்தது ஆந்திராதான். அதன்பிறகுதான் கர்நாடகா, கேரளா என்று இப்படி மாநிலங்கள் பிரிந்தன. இந்த மாநிலங்கள் பிரிந்த போன எச்சம்தான் திரும்ப 'சென்னை மாகாணம்' என்று அழைக்கப்பட்டது. ஏனென்றால், இதன் பழைய பெயர் சென்னை மாகாணம் தான்.

வடஇந்தியாவுக்குச் சென்றால், 'மதராசி' என்று சொன்னால் 'சென்னையிலிருந்து வந்தவர்' என்று பொருளில்லை. பெரிய மாகாணப் பகுதியிலிருந்து வந்திருக்கும் ஆந்திராவையும் குறிக்கும் அதாவது தெலுங்கரையும் குறிக்கும், கன்னடரையும் குறிக்கும், மலையாளியையும் குறிக்கும், தமிழனையும் குறிக்கும். மதராசி என்கிற சொல் இத்தனை பேரையும் குறிக்கிற சொல். இவர்கள் பிரிந்துபோன பிறகு எஞ்சிய பெயர் சென்னை மாகாணம் என்பது. ஆகவே, 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்ட அவ்வப்போது கோரிக்கை எழுந்தது. அண்ணா ஆட்சியில் இருந்த காலத்தில் அதிகாரப்பூர்வமாக, சட்டப்பூர்வமாக 'தமிழ்நாடு' என்று இதற்குப் பெயர் சூட்டப்பட்டது; இது வரலாறு. ஆனால், பெரியாரும் அண்ணாவும் கலைஞரும் தமிழர்கள் இல்லை. அதனால்தான், இவர்கள் திராவிடர்கள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள். அதனால்தான், இவர்கள் திராவிடம் என்கிற அரசியலை உயர்த்திப்பிடித்தார்கள். திராவிடத் தலைவர்கள் அத்தனை பேரையும் மொழி அடிப்படையில் அடையாளப்படுத்துகிறார்கள்.

**தமிழ்த்தேசியத்தின் எதிரி இந்திய தேசியம்**

தமிழ்த்தேசியத்தின் எதிரி இந்திய தேசியமாகத்தான் இருக்க முடியும். தெலுங்கு தேசியமோ, மலையாள தேசியமோ இருக்க முடியாது. இந்திய தேசியத்தை எதிர்க்கிற அரசியல்தான் தமிழ்த்தேசிய அரசியல். ஏனென்றால், இந்திய தேசியம் என்பது மொழிவழி அடிப்படையிலான தேசியத்தை ஒருபோதும் ஏற்காது. மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிப்பதைக்கூட ஏற்றுக்கொள்ளாது. அப்படிப் பிரிவதை பிராந்தியவாதத்தை வளர்க்கும் என்று நம்பக்கூடியவர்கள். பிரிவினைவாதத்தை வளர்க்கும் என்று நம்பக்கூடியவர்கள். மத அடிப்படையில் இந்தியாவை ஒரே தேசமாக ஆக்கவேண்டும் என்பதுதான் ஆர்.எஸ்.எஸ்.சின் திட்டம்.

பெரியார் பேசிய தேசியவாதம், ஒரு கட்டத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்கிறார். இன்னொரு கட்டத்தில் 'திராவிட நாடு' கோரிக்கை வைக்கிறார். இன்னொரு கட்டத்தில் இந்தியாவில் பார்ப்பனர்களைத்தவிர அத்தனை பேரும் திராவிடர்கள்தான்; சாதி ஒழிப்பை ஏற்றுக்கொள்கிறவர்கள் அனைவரும் ஒன்றுசேருவோம் வாருங்கள் என்று சொல்கிறார். சாதிஒழிப்பைஎதிர்ப்பவர்கள், பார்ப்பனியத்தை எதிர்ப்பவர்கள், ஆரியத்தை எதிர்ப்பவர்கள், சனாதன தர்மத்தை எதிர்க்கிறவர்கள், பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்கிறவர்கள் அவ்வளவு பேரும் ஒன்றாகச் சேருவோம் வாருங்கள்; அகில இந்திய அளவில் ஒன்று சேர்வோம் வாருங்கள்; இதுதான் பெரியார். அவருக்கு மொழி அடையாளம் கிடையாது, அவருக்கு மத அடையாளம் கிடையாது, பார்ப்பனர்கள்மீது தனிப்பட்ட முறையில் குறிப்பிட்ட சாதியின்மீது வெறுப்பு கிடையாது. அவர்களின் ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும்.

**பார்ப்பனர்களின் ஆக்கிரமிப்பு**

ராஜாஜி முதலமைச்சராக இருந்தபோது மொத்தம் எட்டு அமைச்சர்கள்தான். பேரவைத்தலைவர், மேலவைத்தலைவர் என்று மொத்தம் பத்துப் பேர். அந்தப் பத்துப் பேரில் ஆறு பேர் பார்ப்பனர்கள்; அமைச்சரவையில். அந்த அளவுக்கு ஆதிக்கம் இருந்தது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் பார்ப்பனர்கள். நீதித்துறையாக இருந்தாலும், நிர்வாகத் துறையாக இருந்தாலும், பத்திரிகைத் துறையாக இருந்தாலும் அத்தனை துறைகளிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கமே கொட்டமடித்தது. பள்ளி—கல்வி ஆசிரியர்கள் நியமனத்தில் பார்ப்பனர்கள்.





கல்லூரிப் பேராசிரியர்கள் நியமனத்தில் பார்ப்பனர்கள். துணைவேந்தர்கள் நியமனத்தில் பார்ப்பனர்கள். இந்த பார்ப்பனர்களின் ஆக்கிரமிப்பையும், ஆதிக்கத்தையும் எதிர்க்கவேண்டும் என்பதில்தான் அவர் குறியாக இருந்தார். வரலாற்றை நாம் தோண்டித் தோண்டிப் பார்க்கிறபோது நமக்கு வியப்பாக இருக்கிறது.

பெரியார், மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் எதிர்த்தபோது இவற்றை ஆதரித்த மறைமலையடிகள், திரு.வி.கல்யாணசுந்தரனார் போன்றவர்கள், தம்மை ஆதரிக்கிறார்கள் என்று இவரும் மகிழ்ச்சியில் இருந்தார். அதன்பிறகு அவருக்குப் புரிந்தது. எப்படியென்றால், சைவம் ஒரு கட்டத்தில் மகாபாரதத்தையும், இராமாயணத்தையும் எதிர்க்கிற முயற்சி எடுத்தது. இவர்கள் தங்களை சைவர்களாக உணர்ந்துகொண்டு சைவ இலக்கியங்களுக்கு வலுத்தேடுவதற்காக நம்முடைய இந்த எதிர்ப்பை அவர்கள் ஆதரிக்கிறார்கள் என்று புரிந்துகொண்டு சைவ இலக்கியங்களை விமர்சிக்கத் தொடங்கினார். தேவாரம், பன்னிரு திருமுறை, ஆழ்வார் பாசுரங்கள் இவற்றையெல்லாம் கடுமையாக விமர்சிக்கத் தொடங்கினார். உடனே, மறைமலையடிகளும் திரு.வி.கல்யாண சுந்தரனாரும் பின்வாங்கிக் கொண்டார்கள். இந்த அரசியலைப் புரிந்துகொள்ள வேண்டும். பெரியார் எப்படிச் செயல்பட்டார் என்பதற்கு இதுவொரு சான்று.

மறைமலையடிகள், திரு.வி.கல்யாண சுந்தரம் போன்றவர்கள் எல்லாம் அவர்கள் வாழ்ந்த காலத்தில் 'இவர்கள் தான் எங்கள் தலைவர், தமிழர் தலைவர்' என்று பிரகடனப்படுத்தியவர்கள். அந்தக் காலத்தில் மிகப்பெரிய ஆளுமைகளாக இலக்கியத்தளங்களிலும், அரசியல் தளங்களிலும், சமூக பண்பாட்டுத் தளங்களிலும் விளங்கியவர்கள் இவர்கள். ஆனால், வெறும் 10 அல்லது 8 அல்லது 6 பேரை வைத்துக்கொண்டு தொடர் போராட்டங்களை நடத்தியவர் தந்தை பெரியார். கூட்டம் வேண்டும் என்று அவர் கவலைப்பட்டதில்லை. செய்தியாக வேண்டும், பத்திரிகைகளில் தொலைக்காட்சிகளில் வரவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டதில்லை. யார் தன்னை ஏற்றுக்கொண்டார்கள், யார் தன்னை அங்கீகரிக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படாத ஒருவர். யார் நம்மை விமர்சிக்கிறார், யார் நம்மீது அவதூறு பரப்புகிறார் என்பதைப் பொருட்படுத்தாத ஓர்

ஆளுமை. இவையெல்லாம் மிக மிக அபூர்வம். இப்படிப்பட்ட ஒரு தலைமை தோன்றுவது, இப்படிப்பட்ட ஒரு ஆளுமை தோன்றுவது மிக மிக அபூர்வம். அவருடைய சிந்தனைக்கு, அவருடைய முயற்சிக்கு, அவருடைய உழைப்புக்கு, அவருடைய தியாகத்திற்கு இன்றைக்கு களங்கம் கற்பிக்க முயற்சிக்கிறார்கள்.

**தேசியவாதம்**

பெரியார் கண்ட தேசியவாதம் சுயமரியாதை தேசியவாதம். தேசியவாதம் என்பதில் பல அணுகுமுறைகள் இருக்கிறது, பல பார்வை இருக்கிறது. இவர்கள் பேசுகிற மொழிவழித் தேசியம் இது. பா.ச.க பேசுவது மதவழித் தேசியம். காந்தி பேசியது நாட்டினவழித் தேசியம். அம்பேத்கரும் பெரியாரும் பேசியது கோட்பாட்டுவழித் தேசியம். மேதகு பிரபாகரன் பேசியது வெறும் மொழி அடிப்படையிலான தேசியவாதம் இல்லை. அவர் தனிநாடு என்கிற முதன்மையான கோரிக்கையை வைத்து முன்மொழிந்த ஒரு தேசியவாதம்.

**தனித்தமிழ்நாடு கோரிக்கையும்**

**போலி தமிழ்த்தேசியமும்**

நீங்கள் பேசும் தேசியவாதத்தில் தனித்தமிழ்நாடு உண்டா? தனித்தமிழ்நாடு என்கிற வார்த்தையை நீங்கள் பேசவில்லை என்றால் நீங்கள் பேசுவது நூறு விழுக்காடு போலி தமிழ்த்தேசியம். தமிழரசன் பேசியது தமிழ்த்தேசியம். ஏனென்றால், தமிழரசன் தனித்தமிழ்நாடு கோரிக்கையை வைத்தார். ஒருகாலமும் யாரோடும் சேரமுடியாது; நீங்கள் வைத்திருக்கிற அரசமைப்புச் சட்டம் வேண்டாம்; உங்களுடைய நாடாளுமன்ற சனநாயகம் எங்களுக்கு வேண்டாம்; இந்தியா என்கிற தேசத்தோடு நான் இணையமாட்டேன்; வடக்கே இருக்கிற உங்களுக்கும், எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை; உங்கள் அரசியல் வேறு, என் அரசியல் வேறு; உங்கள் பாரம்பரியம் வேறு, என் பாரம்பரியம் வேறு; என்னுடைய வரலாறு வேறு, உங்கள் வரலாறு வேறு; எனக்கு இருக்கிற பின்னணி வேறு, உனக்கு இருக்கிற பின்னணி வேறு; உங்களோடு என்னால் இணைந்து வாழமுடியாது. எனவே, எங்கள் நாட்டைத் தனிநாடாக நாங்கள் பிரித்தெடுப்போம். அதுதான் தமிழரசன் முன்மொழிந்த தமிழ்த்தேசியம்.

வர்ணாசிரம தர்மம் ஒழிக்கப்பட வேண்டும். இதுதான் அரசியல் சார்ந்த ஒரு தேசியவாதம். ஆனால், இவர்கள் வெறும் மொழி அடிப்படையில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு பார்ப்பனர்களின் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பெரியார் என்கிற பிம்பத்தின்மீது கை வைக்கிறார்கள். பெரியார், உலகம் வியக்கத்தக்க வகையில் உருவெடுத்து நிற்கிறார். விஸ்வரூபம் எடுத்து நிற்கிறார். பெரியார் என்பவர் தனிமனிதர் அல்ல; பெரியாரின் சிந்தனைகள் சமத்துவச் சிந்தனைகள்; சனாதன ஒழிப்புச் சிந்தனைகள்; அதுதான் பெரியார்.

**பெரியார் பிம்பத்தை அசைக்க நினைக்கிறவர்கள் சிறுத்தைகளின் எதிரி**

தந்தை பெரியாரை அந்தக் காலத்திலிருந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவோ முயற்சித்துப் பார்த்தார்கள். பெரியார் 94 வயது வரையிலும் கடவுள் இல்லை என்று சொல்லி வாழ்ந்தார். அந்த நிமிடம் வரையிலும் அவர் சாதி ஒழிப்பில் உறுதியாக இருந்தார். இப்போது சொல்லுங்கள் நம் தலைவர் யார்? அந்தப் பிம்பத்தை அசைக்க நினைப்பவர்கள் யார்? அவர்கள் தி.மு.க எதிரிகள் கிடையாது, தி.க எதிரிகள் கிடையாது. இன்றைக்கு நான் பிரகடனப்படுத்துகிறேன் “பெரியாரை எதிர்க்கிறவர்கள் சிறுத்தைகளின் எதிரி. பெரியார் பிம்பத்தை அசைக்க நினைக்கிறவர்கள் சிறுத்தைகளின் எதிரி.” இதை நான் மேடைக்காகப் பேசவில்லை.

அதுமட்டுமல்ல, மொழிவழித் தேசியத்தை எதிர்க்கிற, மதவழித் தேசியத்தை எதிர்க்க வேண்டும் அதுதான் தமிழ்த்தேசியம். இல்லை யென்றால், தனித்தமிழ்நாடு கோரிக்கையை வைக்கவேண்டும்; அதுதான் தமிழ்த் தேசியம். தங்களுடைய இந்துத்துவ

தேசியத்திற்கு பிரபாகரன் அவர்களைத் துணைக்கு இழுக்கக் கூடாது; அவரைக் களங்கப் படுத்தக் கூடாது; அவர் பெரியாருக்கு எதிரானவர்; திராவிடத்திற்கு எதிரானவர்; திராவிட அரசியலுக்குஎதிரானவர் அல்லது திராவிடக் கட்சிகளுக்கு எதிரானவர் என்பதைப் போன்ற ஒரு திரிபுவாத அரசியலை இந்த மண்ணில் விதைப்பது மிகவும் ஆபத்தானது. அதை விடுதலைச் சிறுத்தைகள் வேடிக்கை பார்க்க மாட்டோம்.

**திராவிடம் என்றால் அம்பேத்கரியம். திராவிடம் என்றால் பெரியாரியம்**

எப்போதும் சொல்வதைப் போல் சொல்கிறேன், தேர்தலில் நின்றாலும் நிற்காவிட்டாலும் நாங்கள் இந்த நிலைப்பாட்டில் எப்போதும் உறுதியாக இருப்போம். தேர்தலில் வென்றாலும் தோற்றாலும் நாங்கள் இந்தக் கருத்தியல் நிலைப் பாட்டில் எப்போதும் உறுதியாக இருப்போம். ஆகவே, எந்தக் கடப்பாரையைக் கொண்டு வந்து திராவிட அடையாளமாக, சமத்துவ அடையாளமாக, ‘திராவிடம்’ என்றால் சமத்துவம், திராவிடம் என்றால் சமூகநீதி, திராவிடம் என்றால் பார்ப்பனிய எதிர்ப்பு, திராவிடம் என்றால் ஆரிய எதிர்ப்பு, திராவிடம் என்றால் சனாதன எதிர்ப்பு, திராவிடம் என்றால் சகோதரத்துவம். திராவிடம் என்றால் அம்பேத்கரியம். திராவிடம் என்றால் பெரியாரியம். அதை அசைக்க யார் வந்தாலும், எந்தக் கடப்பாரையைத் தூக்கிக்கொண்டு வந்தாலும் சிறுத்தைகள் எதிர்கொள்வோம், களமாடுவோம் என்பதைச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி நிறைவுசெய்கிறேன். நன்றி. வணக்கம்.




**அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம் 18.02.2026 அன்று மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல்.திருமாவளவன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர், காவல் கண்காணிப்பாளர், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.**



**சென்னைப் பத்திரிகையாளர் மன்றத்தில் 20.02.2026 அன்று சுஜாதா சிவஞானம் எழுதிய ‘பிரிவினைக்கான இடமல்ல திருப்பரங்குன்றம்’ எனும் நூலை எழுச்சித்தமிழர் வெளியிட எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா பெற்றுக்கொண்டார்.**



**ஆனந்த விகடன் ‘நம்பிக்கை விருதுகள்’ 2025’ விழாவின் உச்சமாக மார்க்சியச் சிந்தனையாளரும். மனித உரிமைப் போராளியுமான எஸ்.வி.ராஜதுரைக்கு ‘பெருந்தமிழர் விருது’ 14.02.2026 அன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார் எழுச்சித்தமிழர்.**

டிரம்ப் அறிக்கை:

# ‘மோடி தேசிய நலன்களைக் கைவிட்டுவிட்டார்’ நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் அளித்துள்ளேன்!

## முனைவர் தொல்.திருமாவளவன்

“முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையை விவாதிப்பதற்காக அவையின் அலுவல்களை ஒத்திவைப்பதற்கான ஒரு தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கோருகிறேன். அமெரிக்கா விதித்த நிபந்தனைகளுக்கு இந்தியப் பிரதமர் ஒப்புக்கொண்டதாக டிரம்ப் கூறியுள்ளார்: அமெரிக்கா தனது வரிகளை 7 சதவீதம் குறைக்கும், மறுபுறம், இந்தியா அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு எந்த வரியையும் விதிக்காது மற்றும் அதன் வரிகளை பூஜ்ஜியமாகக் குறைக்கும்; மேலும் இந்தியா அமெரிக்காவுடனான அதன் வர்த்தக அளவை மேலும் 500 பில்லியன் டாலர்களால் அதிகரிக்க வேண்டும். ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் கூறியது உண்மையாக இருந்தால், அது இந்திய அரசாங்கம் நமது இறையாண்மையையே சமரசம் செய்து கொண்டுள்ளது என்று அர்த்தம்.

டிரம்பின் அறிக்கை, பிரதமர் நமது தேசிய நலன்களை முற்றிலுமாக கைவிட்டுவிட்டார் என்பதைக் காட்டுகிறது. இருப்பினும், பிரதமரின் வலைதளப்பதிவில், அவர் அமெரிக்க வரி குறைப்பை மட்டுமே வெளிப்படுத்தியுள்ளார். இந்தியாவின் வரி குறைப்பு பூஜ்ஜியமாகக் குறைக்கப்பட்டது மற்றும் கூடுதலாக 500 பில்லியன் டாலர் இறக்குமதிகள் பற்றிய உண்மைகளை அவர் மறைத்துள்ளார். இது மக்களை ஏமாற்றும் செயல். ஈரானை அடிபணியவைக்க டிரம்ப் படைகளைக் குவித்தார். இந்திய பிரதமரை அடிபணிய வைக்க அவர் என்ன செய்தார்? பிரதமர் டிரம்புடன் தான் விவாதித்ததை இந்த நாட்டு மக்களுக்கு வெளிப்படையாக வெளியிட வேண்டும்” எனக் குறிப்பிட்டு இன்று நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்பு தீர்மானத்தை வழங்கி உள்ளேன்.

**17.05.2025**

## ‘லியோனி ஆகிய நான்’ எனும் விழாவில் எழுச்சித்தமிழர் பங்கேற்று வாழ்த்து




**சென்னை கலைவாணர் அரங்கில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி அவர்களின் பொன்விழா 01.02.2026 அன்று ‘லியோனி ஆகிய நான்’ என்னும் தலைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எழுச்சித்தமிழர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்.**



### சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் குறித்து

# எழுச்சித்தமிழர் பேசியதில் என்ன தவறு?

முனைவர் **த.செயராமன்** பேராசிரியர், வரலாற்றுத்துறை (ஓ)

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு.தொல்.திருமாவளவன், சென்னை கொளத்தூரில் 29.01.2026 அன்று ‘தழல் ஈகி’ முத்துக்குமார் நினைவேந்தல் நிகழ்வில் பேசும்போது, ‘சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், தமிழ் அழிவதற்கும், கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள். அவர்களின் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவர் ஆனது.’ ‘எனக்கு எந்த அரசன்மீதும் மதிப்பு கிடையாது. எவனையும் பெரிய சக்தியாகப் பார்க்கவில்லை. அந்த மன்னர்கள் காலத்தில்தான் இந்த நாடு குட்டிச்சுவர் ஆனது. சமஸ்கிருதமயமானது, இந்துத்துவமயமானது.

கோயிலின் கருவறைக்குள்ளே இருந்த தமிழைத் தூக்கி வெளியே வீசப்பட்டதெல்லாம் இந்த பாண்டிய மன்னர்கள், சோழ மன்னர்கள், சேர மன்னர்கள், பல்லவ மன்னர்கள் ஆண்ட காலத்தில்தான். வேள்வி நடத்தியவன், யாகம் நடத்தியவன் எல்லாம், தமிழ்ப் பெயர்களை மாற்றி வடமொழிப் பெயர்களைத் தங்கள் பெயருக்குப் பின்னால் சூட்டிக்கொண்டார்கள்.

இராஜராஜன் என்பது தமிழ்ப் பெயரா? இராஜேந்திரன் என்பது தமிழ்ப்பெயரா? எல்லாரும் வடமொழிப் பெயர்களைச் சூட்டிக்கொண்டவர்கள். வடமொழியிலேயே மயங்கிக் கிடந்தவர்கள். பார்ப்பனர்களின் வேள்வி, யாகங்களில் மயங்கிக் கிடந்தவர்கள். அவர்கள் எப்பேர்ப்பட்ட மன்னாதி மன்னர்களாக இருந்தாலும், என் தமிழ் அழிவதற்கும், கலாச்சாரம் அழிவதற்கும் வழிவகுத்தவர்கள் அவர்கள் என்பதை உணர்ந்தவன் நான். எனவே, எனக்கு ஆண்ட பரம்பரை என்று சொல்வதில் எந்தப் பெருமையும் இல்லை. அதில் உடன்பாடும் இல்லை. வெறும்

மொழிப்பற்று எனக்குக் கிடையாது. வெறும் இனப்பற்று,இன உணர்வு எனக்குத் தேவையில்லை என்று கருதக்கூடியவன் நான். அதுதான் பெரியாரின் பார்வை. சாதியை ஒழிக்காமல் இங்கே சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது என உறுதியாக நின்றவர் தந்தை பெரியார்" என்று பேசினார்.

தமிழ் மன்னர்கள்மீதும் அந்தக் கால கட்டத்தின்மீதும் தொல்.திருமாவளவன் அவர்கள் வைத்த விமர்சனம் ஆய்வின் அடிப்படையில் சரியாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்க வேண்டும்; அவருடைய கருத்துக்கு எதிர்வினை ஆற்றுகிறவர்கள் ஆய்வின் அடிப்படையில் எதிர்வினை ஆற்ற வேண்டும். ஆனால், இதற்கு எதிர்வினை ஆற்றுகிறவர்கள் இராஜராஜ சோழனையும், இராஜேந்திர சோழனையும் யாராவது குறை கூறிவிட்டால், அவர்கள் தமிழினத்திற்கே எதிரிகள் என்ற கோணத்தில் விமர்சனங் களை அள்ளி வீசுவது ஏற்க முடியாத ஒன்று.

**தொல்.திருமாவளவனின் பேச்சுக்கு ஐயா பெ.மணியரசன் ஆற்றியிருக்கும் எதிர்வினை:**

"சிங்கள புத்தத்திற்குத் தமிழர்களை மாற்றிட தமிழ் மன்னர்களை எல்லாம் தாக்குகிறார் திருமாவளவன்!" என்கிறார். பேரரசன் இராஜராஜன், இராஜேந்திரன் காலத்திய சமூகப்போக்கை ஒருவர் விமர்சனம் செய்தால் அவர் புத்த மதத்தைப் பரப்ப முயற்சிக்கிறார் என்றா பொருள்?

திருமாவளவன் என்ன மதப் பிரசங்கம்தான் செய்துகொண்டிருக் கிறாரா? புத்தத்திற்கு மதம் மாற்றுவதைத் தான் அவர் தன் வேலையாக ஏற்றுக்கொண்டிருக்கிறாரா? அவருடைய உரை மக்களை மதம் மாற்றுவதற்கான உரையா? கடந்த பல்லவர் கால, சோழர் கால, பாண்டியர் கால சமூக — அரசியல் நிலைகள் பற்றிய கடுமையான விமர்சனம் அவருடையது. ஐயா மணியரசன் சான்றுகளின் அடிப்படையில் அவருடைய விமர்சனத்தை எதிர்கொண்டிருக்க வேண்டும். ஆனால், எவ்வித தொடர்பும் இல்லாமல், தொல்.திருமாவளவன்மீது அபத்தமான ஒரு குற்றச்சாட்டை வைப்பது எல்லோரையுமே திகைக்க வைக்கிறது.

அது மட்டும் இன்றி, ஐயா மணியரசன் 'தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் திருமாவளவன் இழிவுபடுத்திவிட்டார்' என்கிறார். தொல்.திருமாவளவன் உரையில் தேடித்தேடிப் பார்த்தாலும் தமிழ் மொழியையும் தமிழ் இனத்தையும் இழிவுபடுத்தக்கூடிய ஒற்றைச்சொல்கூட இல்லையே! ஆனாலும் அப்படி ஒரு குற்றச்சாட்டை ஐயா மணியரசன் வைக்கிறார். அதுமட்டுமின்றி, தொல். திருமாவளவன் அவர்களை எதிர்த்து சாதிகளை எல்லாம் அணிசேர்க்கை செய்கிறார்.

"தமிழ்மொழியை தமிழ் இனத்தை இழிவுபடுத்தினால் தமிழர்கள் கட்சி வேறுபாடின்றி — சாதி வேறுபாடின்றி எதிர்ப்போம்!" என்கிறார். ஐயா மணியரசன் மேலும் கூறுகிறார்: "தமிழ் மன்னர்களைத் தாக்குவதற்காக, சூழ்ச்சியாக — தமிழ் மன்னர்கள் சமற்கிருதத்தை அனுமதித்தார்கள், — சமற்கிருதத்தில் பெயர் வைத்துக் கொண்டார்கள் — என்று தந்திரமாகப் பேசுகிறார் திருமா. தமிழர்களே விழிப்போடிருங்கள்!" என்கிறார்.

**சாதிய உணர்வாளர்கள்**

தமிழ் மன்னர்கள் சமஸ்கிருதத்தை அனுமதிக்கவில்லையா? சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துக்கொள்ளவில்லையா? தங்கள் நிர்வாகத்தில் சமஸ்கிருதத்தைப் பயன்படுத்தவில்லையா? சோழ, பாண்டிய மன்னர்கள் வருணாசிரமத்தை ஏற்றுக்கொள்ளவில்லையா? — என்பது போன்ற கேள்விகளுக்கு நாம் சான்றுகளின் அடிப்படையில் பேச வேண்டும்.

பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, தமிழிசை சௌந்தரராஜன் போன்றவர் களும் தொல்.திருமாவளவனைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். திரு. அண்ணாமலை மாபெரும் மன்னர்களை தொல்.திருமாவளவன் அவதூறாகப் பேசுவதாகக் கூறுகிறார். அதாவது,

அவர்களெல்லாம் மாபெரும் மன்னர்கள், பெரிய மனிதர்களைக் கண்டித்துப் பேசக்கூடாது என்பது அவர் பார்வை. தொல். திருமாவளவனைக் கண்டித்துப் பேசியவர்களுக்குள் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அவர்கள் அனைவருமே சாதிய உணர்வாளர்களாகவும், பார்ப்பன ஆதரவாளர்களாகவும், இந்துத்துவ சிந்தனை கொணடவர்களாகவும் இருக்கிறார்கள்.

திரு. தொல்.திருமாவளவன் ‘தமிழ் மன்னர்களைத் திட்டமிட்டே தாக்குகிறார்’ என்று ஐயா மணியரசன் கூறுகிறார். ‘தமிழ் மன்னர்கள் சமஸ்கிருதத்தை அனுமதித்தார்கள், சமஸ்கிருதத்தில் பெயர் வைத்துக்கொண்டார்கள் — என்று கூறுவது, சூழ்ச்சியாக, தந்திரமாகப் பேசுவது’ என்று ஐயா மணியரசன் கூறுகிறார். திருமாவளவன் கூறியது சான்றுகளின் அடிப்படையில் தவறு என்றுதான் நிரூபிக்க வேண்டுமேயொழிய, அவர் சூழ்ச்சி செய்கிறார் என்றெல்லாம் பேசக்கூடாது.

**சோழ மன்னர்கள் சமஸ்கிருதப் பெயர்களைச் சூட்டவில்லையா?**

இராஜராஜன், இராஜேந்திரன் என்பவை தமிழ்ப்பெயர்களா? என்று திருமாவளவன் கேட்டதற்குப் பதிலாகச் சிலர், அருண்மொழி என்பது இராஜராஜனின் இயற்பெயர்; மதுராந்தகன் என்பது இராஜேந்திரனின் இயற்பெயர் என்று பதில் அளித்திருக்கிறார்கள். இராஜராஜ சோழன் அருள்மொழி தேவன் என்றும் அருண்மொழிவர்மன் என்றும் வரலாற்றில் அறியப்படுகிறான்.

இதில் தேவன் என்பது தமிழ்ச் சொல்லா? வர்மன் என்பது தமிழ்ச் சொல்லா? வர்ணாசிரமத்தில் இரண்டாம் நிலையில் இருக்கும் சத்திரியர்களின் பட்டப்பெயர்தான் வர்மன் என்பது. இராஜேந்திரன் என்பது தமிழா என்ற கேள்விக்குப் பதிலாக, அவருடைய இயற்பெயர் மதுராந்தகன் என்று கூறுகிறார்கள். மதுராந்தகன் என்பது தமிழா? மதுரம் என்ற சொல் தமிழா? மதுராந்தகன் என்ற சொல்லுக்கும் மதுரை நகருக்கும் தொடர்பு இல்லை. இராஜராஜன் சூடிக்கொண்ட அத்தனை பட்டப்பெயர்களும் சமஸ்கிருதப் பெயர்கள்தான்.

சமீப காலத்தில் பலர் ஆய்வு என்ற பெயரில் ‘சோழர்கள் காலத்தில் சாதிமுறையே கிடையாது என்றும், சோழர்கள் காலத்தில் வருணாசிரமம் கிடையாது என்றும், சோழர்களால் சமஸ்கிருதம் ஆதரிக்கப்படவில்லை ’என்றும், தொடர்ந்து எழுதி வருவதன் உண்மைத்தன்மையை நாம் ஆய்வு செய்தாக வேண்டும்.

**பேரரசன் முதலாம் இராசராசன் (கி.பி.985-1014) காலத்தில் வர்ணாசிரமம் சோழப்பேரரசில் ஏற்கப்பட்டதா?**

ஏற்கப்பட்டது என்பதே உண்மை. முதலாம் இராஜராஜனின் தந்தை சுந்தரச் சோழரின் காலத்திலேயே மனுதர்ம முறை தளர்ச்சி நீக்கி நிலை நிறுத்தப்பட்டதாக செப்பேட்டுச் சான்று கூறுகிறது.

சோழ மன்னர்கள் மனுநெறி காப்பதில் மகிழ்ச்சி கொண்டார்கள். சமஸ்கிருதத்திற்கு கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் முதலிடம் தந்தார்கள். தமிழைக் கற்பிக்க கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் உருவாக்கிய பெரிய கல்வி நிலையங்கள் எல்லாம் சமஸ்கிருதமே கற்பித்தன. மாணவர்களும் ஆசிரியர்களும் பார்ப்பனர்களாகவே இருந்தார்கள். பிரமிக்க வைக்கும் பெரும் ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

முதலாம் இராஜராஜன் ஏற்ற பட்டங்களில் ஒன்று ‘சத்திரிய சிகாமணி’. இது சமஸ்கிருதப் பட்டம்தான். இதன் பொருள் சத்திரிய குலத்தின் தலைசிறந்த ரத்தினம் என்பதுதான். ‘சத்திரிய சிகாமணி’ என்ற சொல் சோழ மன்னர்கள் வர்ணாசிரமத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்று. ‘சத்திரிய சிகாமணி வளநாடு’ என்று ஒரு நிர்வாகப் பிரிவு அப்போது இருந்தது. இன்றைய நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டம் ஆகியவை சத்திரிய சிகாமணி வளநாட்டில் அடங்கும்.

தஞ்சை பெரிய கோயில் கருவறையின் வெளிப்புறச் சுவர்களில் பீடப்பகுதியில் செதுக்கப்பட்டுள்ள நீண்ட கல்வெட்டில் இதற்குச் சான்றுள்ளது. (தென்னிந்திய கல்வெட்டு, தொகுதி: 2, பகுதி: 1, எண்: 69).

**சத்திரிய சூடாமணி**

இராஜராஜ சோழனின் தளபதி பஞ்சவன் மாராயன் என்பவன் கொங்கு பகுதியில் பெற்ற வெற்றிக்காக 'சத்திரிய சிகாமணி கொங்காழ்வான்' என்ற பட்டத்தை இராஜராஜ சோழன் வழங்கினான். தஞ்சை பெரிய கோயில் வடக்குச்சுவரில் இதற்கான சான்று கல்வெட்டாக உள்ளது (தென்னிந்திய கல்வெட்டு, தொகுதி: 2, பகுதி: 3, எண்: 66 ). முதலாம் இராஜராஜனின் மற்றொரு பட்டப்பெயர் 'சத்திரிய சூடாமணி'. இது ஆனைமங்கலம் செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (Larger Leiden Plates of Rajaraja I, Epigraphia Indica, vol. 22 , No.34, pp. 213 -236. )

மேலும், ஆனைமங்கலம் 'சத்திரிய சூடாமணி வளநாடு' என்ற நிர்வாகப் பகுதிக்குள் இருந்ததை ஆனைமங்கலம் செப்பேடு கூறுகிறது. முதலாம் இராசேந்திர சோழன் கி.பி 1020 இல் அவனுடைய எட்டாவது ஆட்சி ஆண்டில் வெளியிட்ட கரந்தை செப்பேட்டில் 'சத்திரிய சிங்கன்' என்று குறிப்பிடப்படுகிறான். அவன் தனது பெயரால் 'சத்திரிய சிங்க வளநாடு' என்ற நிர்வாகப் பிரிவையும் ஏற்படுத்தியிருந்தான். (The Karandai Tamil Sangam Plates of Rajendra chola I , Memoirs of the Archaeological Survey of India (MASI), No.79, Ed. K.V.Subrahmanya Aiyer, 1949).

முதலாம் இராஜராஜ சோழனின் இன்னொரு பட்டப்பெயர் 'சத்திரிய பயங்கரன்'. இவர் பெயரால், 'சத்திரிய பயங்கர வளநாடு' என்ற ஒரு நிர்வாகப் பகுதி இருந்தது. (தென்னிந்திய கல்வெட்டு, தொகுதி: 2, பகுதி: 1, எண்: 1).

இராஜராஜ சோழனின் தனிப்பட்ட பாதுகாவலர் படைகளுள் ஒன்று 'சத்திரிய சிகாமணி தெரிஞ்ச வலங்கை வேலைக்காரர்' என்ற பெயரில் இருந்தது. தஞ்சை பெரிய கோயில் தெற்குச்சுவர் கல்வெட்டு (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி: 2, பகுதி: 1, கல்வெட்டு எண் 1 & 66)

**மனு தருமம் பேணப்பட்ட காலம்**

அன்பில் செப்பேடு என்பது சுந்தர சோழன் என்ற இரண்டாம் பராந்தகன் காலத்தில் நான்காவது ஆட்சி ஆண்டில் (கி.பி. 957) வெளியிடப்பட்டது. இது சோழ மன்னர்களின் வம்சாவளி குறித்து பேசுகிறது. பிரம்மன், மனு ஆகியோர் வழிவந்தவர்கள் சோழர்கள் என்றும், சுந்தரசோழன் 'சத்திரிய சூடாமணி' என்றும் புகழப்படுகிறான்.

அன்பில் செப்பேட்டில் சமஸ்கிருதப் பகுதியான பிரசஸ்தியை கவிஞர் நாராயணன் மற்றும் பிறபகுதியை (தமிழில்) மாதவபட்டன் ஆகியோர் எழுதினர். இந்த செப்பேடுகளை பார்ப்பனர்களே எழுதினார்கள். சுந்தரச் சோழரின் அமைச்சர் அநிருத்த பிரம்மராயருக்கு மயிலாடுதுறை அருகே கருணாகரமங்கலம் என்ற ஊரை தானமாக வழங்கியதை இந்தச் செப்பேடு ஆவணப்படுத்துகிறது. அநிருத்தருக்கு 'பிரம்மாதிராஜன்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. இந்தச் செப்பேடு, திருமால் உந்தியிலிருந்து பிரம்மனும், அதை எடுத்து மரிசி, காசிபார், மனு, சிபி, பாகீரதன் போன்றோர் வழிவந்தனர் என்றும், அந்த வழியில் சோழர்கள் பிறப்பெடுத்தார்கள் என்றும் குறிப்பிடுகிறது. சமஸ்கிருதம், தமிழ் என்ற இரண்டு மொழிகளில் இந்தச் செப்பேடுகள் அமைந்துள்ளன. (Epigraphia Indica, Volume XV, ð,. 58 -72. பதிப்பாசிரியர்: டி.ஏ.கோபிநாத ராவ்).

அன்பில் செப்பேடு, திருவாலங்காடு செப்பேடு ஆகியவை சோழர் குலத்திற்கு ஆரிய புராணங்களில் தோற்றத்தைத் தேடுகின்றன. இவர்களுடைய காலத்தில் மனு தருமம் பேணப்பட்டது என்பதில் சந்தேகம் இல்லை; சமஸ்கிருதம் உயர்நிலையில் போற்றப்பட்டது என்பதிலும் சந்தேகம் இல்லை.

கரந்தைச் செப்பேடு முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி.1012 — 1044) எட்டாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டது. இதில் 55 ஏடுகள் உள்ளன. இது சோழர்களை சூரிய வம்சத்தைச் சேர்ந்த சத்திரியர்கள் என்று குறிப்பிடுகிறது. சமஸ்கிருதப் பகுதிக்கான ஆங்கில மொழியாக்கத்தை மேற்கோளாகக் காட்டினால், முதலாம் இராசேந்திர சோழனை

"He was the Crest - jewel (Shikhamani )of the Kshatriya race, a sun to the darkness of his enemies, and a kalpa-tree to those who sought refuge in him." என்று புகழ்ந்து குறிப்பிடுகிறது. (Karanthai Tamil Sangam Copper Plate Inscriptions of Rajendra Chola I., Edited by K.G. Krishnan, Archaeological Survey of India (Memoirs of the ASI, No. 79); SII, Vol.25, No.57-58). இவ்வாறு சோழர்கள் தங்களை சத்திரியர்களாக அடையாளப்படுத்திக் கொள்வது என்பதன் பொருள் என்ன? வர்ணாசிரம முறையை ஏற்றுக்கொண்டதற்கான அடையாளம் இது ஆகும். முதலாம் இராசராச சோழன் 'சத்திரிய சிகாமணி' என்ற பட்டத்தை ஏற்றிருந்தான். அவனுடைய பெயரில் ஒரு வளநாடு விளங்கியது.

இராஜராஜனின் 29ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி.1014) தஞ்சை பெரிய கோயிலில் வெட்டிய கல்வெட்டு 'சத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல் நாட்டு இடையன்...' என்று குறிப்பிடுகிறது. (South Indian Inscriptions -SII, Vol. 2, No. 92 ) .

முதலாம் இராஜேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேடுகள் (கி.பி 1018—19) சுந்தர சோழரை 'சத்திரிய சூடாமணி' என்று குறிப்பிடுகிறது. சத்திரிய சூடாமணி என்பதன் தமிழாக்கமாக 'சத்திரியர் தலைமணி வளநாடு' என்ற பெயரில் நிர்வாகப் பகுதி ஒன்று இருந்தது. நாகை, திருவாரூர், கீழ்வேளூர், தேவூர் ஆகிய பகுதிகள் இதில் அடங்கியிருந்தன. (South Indian Inscriptions (SII), Volume III, Part III, Section 2 (The Tiruvalangadu Copper-Plates, slokas 61 and 62 )

இராசராச சோழன் தனது தந்தையின் நினைவாக 'சத்திரிய சூடாமணி மங்கலம்' என்ற ஊரை உருவாக்கினான். இதனால் சில நேரங்களில் இந்தப் பட்டம் இராசராசனுக்கும் உரியதாகக் கருதப்படுகிறது. ஆனால், செப்பேட்டுச் சான்றுகளின்படி, இது இராசராசனின் தந்தை சுந்தர சோழரையே குறிக்கிறது.

திருவாரூர் தியாகராஜர் கோயில் கல்வெட்டுகளில் 'சத்திரிய சூடாமணி வளநாட்டு திருவாரூர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி: 2, கல்வெட்டு எண்: 67).

இராசராச சோழனின் தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் 'சத்திரிய சிங்க வளநாடு' என்று ஒரு நிர்வாகப் பகுதி குறிப்பிடப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, அரியலூர் மாவட்டப் பகுதிகள் இதில் அடங்கும். (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி 2, கல்வெட்டு எண் 92).

இந்தக் கல்வெட்டுகளில் இருந்து ஓர் உண்மையைப் புரிந்துகொள்ளலாம். வர்ணாசிரம அடிப்படையில் நாடு இயங்கியது. சமூகத்தின் நான்காவது வருணம் அந்தந்த சாதிப்பெயர்களிலேயே அடையாளப்படுத்தப்பட்டது. சோழர்கள் பிரம்மதேயங்களை பிராமணர்களுக்கு வழங்கினார்கள். வேதம் ஓதும் பிராமணர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டன. சமூகத்தில் பிராமணர் களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. சோழர்கள் ஒரு காலத்திலும் வர்ணாசிரம முறையை மாற்ற முற்பட்டதில்லை.

முதலாம் குலோத்துங்க (கி.பி.1070 — 1120) சோழனின் 'புகழ் மாது விளங்க..' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி '..மனுநெறி தழைப்ப நால்வகை வருணமுந் தத்தம் நிலைமையில் நிற்ப...' அவன் ஆட்சி புரிந்ததாகப் பதிவு செய்கிறது.

முதலாம் இராஜராஜனின் 29 வது ஆட்சியாண்டில் (கிபி 1014) வெட்டப்பட்ட தஞ்சை பெரிய கோயில் கல்வெட்டில் '... சத்திரிய சிகாமணி வளநாட்டு மருகல்

நாட்டு இடையன்..' என்று குறிப்பிடுகிறது.

முதலாம் இராஜராஜன் 'சத்திரிய சிகாமணி' என்றுபல கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறான். (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி: 2, கல்வெட்டுகள்: 1, 4, 5, 9)

மற்றொரு கல்வெட்டில் இராஜராஜ சோழன் பெயரில் அமைந்துள்ள வளநாடு 'சத்திரிய சிம்ம வளநாடு...' என்று குறிப்பிடப்படுகிறது. (தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி: 2, எண் 66, 94.)

முதலாம் இராசேந்திர சோழனின் திருவாலங்காடு செப்பேட்டில், தமிழ் பகுதியில் '...மனுநெறி தழைப்ப சதுர்வேத நெறி வளர ...' என்று வருகிறது. (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி: 3, திருவாலங்காடு செப்பேடுகள்). முதலாம் ராஜேந்திர சோழன் வர்ணாசிரம தர்மத்தை ரட்சித்தவன் பாதுகாத்தவன் என்று இக்கல்வெட்டு புகழாரம் சூட்டுகிறது.

திருவாரூர் தியாகராஜர் கோயிலில் உள்ள இரண்டாம் இராசராசனின் 15வது ஆட்சியாண்டில் (கிபி 1161) வெட்டப்பட்ட, 'பூமருவிய பொழிலேழும்...' என்று தொடங்கும் மெய்க்கீர்த்தியில், வர்ணாசிரம பாதுகாப்பு குறித்த சான்று உள்ளது.

'மனுநெறி தழைப்பச் சதுர்வேத நெறி வளர' 'வர்ணாச்சிரமந் தழைப்பத் தர்மஞ் செழிக்க...' என்று வருகிறது. நான்கு வருணங்களையும், நான்கு ஆசிரமங்களையும் (பிரம்மச்சாரிய, கிரகஸ்தா, வனப்பிரஸ்தா, சன்னியாசின் ஆகியவை) பாதுகாத்தான் என்று இக்கல்வெட்டு கூறுகிறது. (தென்னிந்திய கல்வெட்டுகள், தொகுதி: 8, எண்: 163)

முதலாம் இராஜராஜ சோழன் தன் 29வது ஆட்சி ஆண்டில் (கிபி 1014), தஞ்சை பெரிய கோயில் தெற்குப்புறச் சுவரில் வெட்டுவித்த கல்வெட்டில் நிர்வாகப் பிரிவுகளான ஒன்பது வளநாடுகளின் பெயர்களையும் குறிப்பிடுகிறான். இதில் நிர்வாகப் பிரிவான 'சத்திரிய சிம்ம வளநாடு' என்பதும் குறிப்பிடப்படுகிறது. இதில் இராசராசன் கோயிலுக்கு நேரடியாக வழங்கிய நிலக்கொடைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் இராசேந்திர சோழனின் 31வது ஆட்சி ஆண்டில் (கிபி 1043) திருவாலங்காடு செப்பேடுகள் வெளியிடப்பட்டன. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவாலங்காடு வதாரண்யேஸ்வரர் கோயிலுக்கு பழையனூர் என்ற கிராமத்தை தேவதானமாக வழங்கியதையே திருவாலங்காடு செப்பேடு குறிப்பிடுகிறது. இந்தச் செப்பேட்டில் சோழ வம்சத்தின் வம்சாவளி விரிவாகக் குறிப்பிடப்படுகிறது. சோழ வம்சாவளியை புராணப் பின்னணியில் சமஸ்கிருதப் பகுதி விரிவாக விவரிக்கிறது. சோழர்கள் சூரியவம்சத்தினர் என்றும், சூரியனிலிருந்து மனு, அதன் பிறகு இக்ஷ்வாகு, சிபிச்சக்கரவர்த்தி, காவேரிகண்டன், கரிகால் சோழன், கோச்செங்கணான் போன்றோர் வழியில் சோழர்கள் வந்ததாக குறிப்பிடுகிறது.

(விஷ்ணு புராணம் ஸ்ரீமத் பாகவதம் ஆகியவை குறிப்பிடுகிறபடி, வைவஸ்வத மனுவின் மகன் மனு ஆவார். புராணங்கள் கூறுகிறபடி, நீண்ட காலம் குழந்தைகள் இல்லாமல் இருந்த மனு ஒரு தும்மல் போட்டதில் இக்ஷ்வாகு பிறந்தார். இவர் அயோத்தியை தலைநகராக கொண்டு கோசல நாட்டை ஆளத் தொடங்கினார். இவரே அயோத்தியின் முதல் மன்னர். மனுதர்மத்தை பூமியில் முறையாக அமல்படுத்திய முதல் அரசர். வால்மீகி ராமாயணத்தில் வரும் இராமர் இக்ஷ்வாகு வம்சத்தை சேர்த்தவர்.)

இக்ஷ்வாகு வம்சத்தில் வந்த சிபி சக்கரவர்த்தி போன்றோரை இராசேந்திர சோழனின் முன்னோர்களாக இது குறிப்பிடுகிறது. சோழர்கள் மரபுக்கு புராண அடிப்படையில் பிறப்பு, தெய்வீகத்தன்மை போன்றவற்றைக் கற்பிக்கிறது.

வடமொழிப் பகுதியில் 69 மற்றும் 70வது சுலோகங்களின் பகுதிகளில் ராஜேந்திர சோழனின் ஆட்சித் திறத்தைப் பற்றிக் கூறும்போது, உலகில் கலியுகத்தினால்

ஏற்படும் குழப்பங்களை நீக்கி, நான்கு வருணங்களையும் அவற்றிற்குரிய கடமைகளில் நிலை நிறுத்தி காத்தவன் என்று திருவாலங்காடு செப்பேடு பதிவு செய்கிறது.

இது இராசராச சோழனின் மகன் பற்றியது; இராசராச சோழனின் தந்தையாகிய சுந்தரச் சோழரைப் பற்றியும் திருவாலங்காடு செப்பேடு இப்படிக் கூறுகிறது: (வடமொழிப் பகுதியில் 57—வது சுலோகத்தில்) “கலியுகத்தின் தாக்கத்தால் தளர்ந்து போன தனது சட்டங்களை மனுநீதி மீண்டும் நிலை நாட்டுவதற்காக மனுவே இந்த மன்னன் உருவில் மீண்டும் பூமிக்கு வந்திருப்பதாக மக்கள் நம்பினர். Verse 57: “The mass of people believe this king to be Manu, who, out of Love for the (good ) conduct which was set forth by himself, has come to the earth once again to establish his law which had become lax under the influence of the Kali (age ).”

**சமஸ்கிருத மெய்க்கீர்த்தி**

சமுதாய அடுக்கைக் குறிக்கும்போது நான்கு வர்ணங்களும் (சதுர்வர்ணங்கள்) தத்தம் தர்மங்களைப் பின்பற்றி வாழ்ந்ததாகச் செப்பேட்டின் சமஸ்கிருத மெய்க்கீர்த்திப் பகுதி குறிப்பிடுகிறது. நான்காவது வர்ணத்தைக் குறிக்க சதுர்த்த வருணம் என்று சமஸ்கிருதப் பகுதி குறிக்கிறது. ஆனால், தமிழ்ப் பகுதியில் வேளாளர் என்று வருகிறது.

சங்க காலத்தில் இருந்தே ஆரியத்துக்கு அடிமைப்பட்ட மன்னர்கள் இருந்து வந்திருக்கின்றனர். இராசசூயம் வேட்ட பெறுநற்கிள்ளி, பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி, மனுநீதிச்சோழன் என்ற பெயர்கள் தமிழ் மன்னர்களின் ஆரிய அடிமைத்தனத்தைக் காட்டவில்லையா?

இடைக்காலத்தில் கலிங்கத்துப்பரணி ‘மனுவினுக்கு மும்முடி நான் மடியாஞ் சோழன்...’ என்று கூறுகிறது.

முதல் குலோத்துங்கன் ‘மனு குல தீபன்’ என்ற சிறப்புப்பெயரை எடுத்துக்கொண்டான். அவனுடைய ஒரு மெய்க்கீர்த்தி இவ்வாறு புகழ்கிறது:

“...மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்

செங்கோல் திசைதொறுஞ் செல்ல...”

சோழ மன்னர்களின் மெய்க்கீர்த்திகள் இந்த மன்னர்கள் எப்படி ஆரிய அடிமைகளாக இருந்தார்கள், எப்படி மனுதர்மத்தை நிலைநிறுத்தினார்கள் என்பதைப் பதிவு செய்கிறது. இரண்டாம் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியில்,

“மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையர் கற்பும்
ஆதி அந்தண ராகுதிக் கனலு
மீதெழு கொண்டல் வீசுதண் புனலு
மேதினி வளருஞ் சாதி ஒழுக்கமும்
நீதி அறமும் பிறழாது நிகழப்
பாவம் பழனப் பரப்பும் பணைக்கை
மாவு மல்லது வன்றளைப்படுதல்...”

என்று புகழப்படுகிறான். அதாவது, இரண்டாம் குலோத்துங்கன் மனுதர்மம் விளங்கச் செய்தானாம்; சாதி ஒழுக்கத்தைக் காத்தானாம். இரண்டாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில்,

“...அருமறை விதிநெறி யனைத்துந் தழைப்ப வருமுறை யுரிமையில் மணிமுடி சூடி திங்கள் வெண்கொடை திசைக்களிரட்டும்...” என்று புகழப்படுகிறான். இவனுடைய ஆட்சிக்காலத்தில் மறைநெறி நிலை நிறுத்தப்பட்டது. இரண்டாம் இராசாதி இராச சோழனது மெய்க்கீர்த்தியில்,

“சமய மாறும் தலையெடுப்பத் தருமமும் மரு மறையு மோங்கி அமைவில்லா மனுவொழுக்க மாதியாம்படி நிலை நிற்க...”

என்று பேசப்பட்டுள்ளது. ஆறுவகை சமயமும், வர்ணாசிரம தர்மம், மறைகளும், மனுநீதி வரையறுத்த ஒழுக்கமும் வளர்க்கப்பட்டதாகப் பதிவு செய்கிறது. மூன்றாம் குலோத்துங்க சோழனது மெய்க்கீர்த்தி,

“... புயல் பெருக வளம் பெருகப் பொய்யாத நான்மறையின் செயில் வாய்ப்பத் திருமகளும் சயமகளும் சிறந்து

வாழ ...” என்று நான்மறை ஆதிக்கம் செலுத்தியதைப் பதிவு செய்கிறது. மூன்றாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்தி,

“....ஒப்பறிய மறைநூலும் உரை திறம்பா மனு நூலுஞ்

செப்பறிய வடகலையும், தென்கலையுந் தலையெடுப்ப

நீதிதரு குலநான்கும் நிலை நான்கு நிலை நிற்ப


ஆதியுகங் குடிபுகுத அறுசமயம் தழைத்தோங்க..” என்று பேசுகிறது. இவனுடைய ஆட்சியில், வேதங்கள் சிறப்பிக்கப்பட்டதையும், மனுநூல் பின்பற்றப்பட்டதையும், வடகலையும் தென்கலையும் செழித்ததையும், மனு சாத்திரம் வகுத்துத் தந்த நான்கு வர்ணங்களும் நிலைநிறுத்தப் பட்டதையும், ஆறு வகை சமயங்கள் தழைத்தோங்கியதையும் பதிவு செய்கிறது. மூன்றாம் இராசேந்திர சோழனது மெய்க்கீர்த்தி

“...வீரராட்சசன் எனப் போற்றப் படுபவனும், லங்காராமன் என்னும் பெயருடையானும், மனுக் குலத்தை உயர்த்தியவனும்...” என்று தொடர்கிறது.

இந்தப் பதிவுகள் அனைத்தும் சோழ அரசர்கள் மனுதர்மத்தை கடைப்பிடித்தனர் என்பதையும், நாட்டில் நடைமுறைப்படுத்தினர் என்பதையும் தெளிவாகப்பதிவுசெய்கின்றன.இந்தசோழ மன்னர்கள் காலத்தில் பார்ப்பனர்களுக்கு ஏராளமான பிரம்மதேயங்களை வழங்கியதும், அவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டதும், சமூகத்தில் சாதிகளும், சாதி அடிப்படையில் படிநிலைத் தகுதிகளும் உருவாக்கம் பெற்றதும், அடிமைமுறை விரிவாக்கம் பெற்றதும், சாதி அடிப்படையில் இழிவுகளும், துயரங்களும் எளிய மக்கள்மீது சுமத்தப்பட்டதும் சோழர்கள் கால வரலாற்றின் மறைக்க முடியாத ஒரு கூறுதான். சோழர்கள் காலத்தில் வர்ணாசிரம முறை ஏற்கப்பட்டிருந்தது என்பதற்கு ஏராளமான கல்வெட்டுகள் மற்றும் செப்பேட்டுச் சான்றுகள் இருக்கின்றன. இந்நிலையில் சோழர்கள் காலத்தில் வர்ணாசிரம முறையே கிடையாது என்றும், ஏற்றத்தாழ்வு என்பதே கிடையாது என்றும் எழுதுவது அப்பட்டமான பொய்யல்லவா?

ஒரு நிலவுடைமைக் காலகட்டத்தின் அத்தனை சமூக ஒடுக்குமுறைகளும் துயரங்களும் சோழர்கள் காலத்திலும் இருந்தன; அதன் பிறகும் அவை தொடர்ந்தன. சோழர்கள் காலத்தில் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டன; வேளாண்மைத் தகவமைப்புகள் உருவாக்கப்பட்டன; பல நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டன. ஆனால், அதே நேரம் மக்களில் ஒரு பகுதியினர் தங்களை அடிமைகளாக விற்றுக் கொண்டனர் என்ற நிலையும் இருந்தது. நாட்டின் தீண்டாச்சேரியும் இருந்தது. பெண்களை உடன்கட்டை ஏற்றும் பழக்கமும் இருந்தது. பெண்களை அடிமைகளாக கோயில்களுக்கும் பெருமக்களுக்கும் விற்கும் பழக்கம் இருந்தது. இவை கடந்த கால உயர்வும் துயரங்களும்.

இந்நிலையில், சோழர்கள் தமிழ் மன்னர்கள் என்று கூறி, அதைப் பொற்காலம் எனப் போற்றுவதும், அதை தங்கள் அடையாளமாக முன்னிறுத்துவதும் மிகவும் பிற்போக்குத்தனமானது. சோழ மன்னர்கள் தங்கள் சாதிக்காரர்கள் என்று எந்த அடிப்படையுமின்றி சில சாதிகள் சொந்தம் கொண்டாடுவதும், தாங்கள் ‘ஆண்ட சாதிகள்’ என்று பெருமை பேசுவதும், சாதி உணர்வை விசிறி விடுவதும், பிற சாதிகளை அடக்கி ஆள முற்படுவதும், நாம் அடைந்துவிட்டதாகக் கருதும் ஜனநாயக அரசு முறையையும், சனநாயக சிந்தனையையும் கேலி செய்வதாகும். ஆகவே, தமிழ்த்தேசிய இனத்தின் பொற்காலம் எதிர்காலத்தில் இருக்கிறது; கடந்த காலத்தில் இருந்ததாக கற்பனை செய்து கொண்டு மயங்கக் கூடாது.




# விளிம்புநிலை மக்களுக்கு எதிரான பட்ஜெட்

## நாடாளுமன்றத்தில் எழுச்சித்தமிழர் ஆவேசம்

**ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எதிர்த்து சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தொல். திருமாவளவன் அவர்கள் 11.02.2026 அன்று ஆற்றிய உரை:**

அவைத்தலைவருக்கு வணக்கம். இந்த பட்ஜெட் விளிம்புநிலை மக்களுக்கு எதிரானது என்பதை முதலில் வேதனையோடு பதிவுசெய்ய விரும்பு கிறேன், விவசாயிகளை, தொழிலாளிகளை வஞ்சிக்கிற பட்ஜெட்டாக இது உள்ளது. அதுமட்டுமல்லாமல் தமிழ் நாடு உள்ளிட்ட இந்தி அல்லாத பிறமொழி பேசும் மாநிலங்களைக் குறிவைத்து, பா.ச.க ஆட்சி அல்லாத அல்லது ஆளமுடியாத மாநிலங்களைக் குறிவைத்து புறக்கணிக்கிற, வஞ்சிக்கிற ஒரு பட்ஜெட்டாக இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு இந்த பட்ஜெட்டில் எந்தவொரு புதிய திட்டத்தையும் அறிவிக்கவில்லை. நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

ஏற்கெனவே, சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்திற்கு ஒதுக்கவேண்டிய நிதி மறுக்கப்பட்டிருக்கிறது. 3,542 கோடி, ஜல் ஜீவன் மிஷன் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு கோரிய 3,100 கோடி மறுதலிக்கப்பட்டிருக்கிறது. தற்போது புதிய திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படாமல் வஞ்சிக்கப்பட்டுள்ளது. மாநிலங்களுக்கு வரிவருவாயில் நிதியைப் பகிர்வு செய்வதற்கு 16வது நிதிக்குழுவிற்கு மாநிலங்களின் சார்பில் விடுத்த கோரிக்கை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும் என்பதாகும். ஆனால், மீண்டும் அதே 41 சதவிகிதத்தை மட்டுமே ஒதுக்கீடு செய்வது என்ற முடிவை 16வது நிதிக்குழு பரிந்துரைத்துள்ளது. அதைப் பின்பற்றியிருக்கிறது அரசு. அதன்படி பார்த்தால் தமிழ்நாட்டிற்கு 4 சதவிகிதம் மட்டுமே. அதிலும், தற்போது 1,200 கோடி ரூபாயைக் குறைத்திருக்கிறது இந்த பட்ஜெட்டில் என்பதை வேதனையோடு நான் பதிவுசெய்கிறேன்.

கோவை பெருநகரத்திலும் மதுரை பெருநகரத்திலும் மெட்ரோ இரயில் திட்டம் தேவை என்கிற கோரிக்கை ஏற்கப்பட்டு இப்போது அது நிராகரிக்கப்பட்டிருப்பது வேதனையளிக்கிறது. அதுபோல் ஓசூர், மிக முக்கியமான ஒரு பகுதி. தருமபுரி அருகே உள்ள ஒரு இடம். தொழில் வளர்ச்சி

பெற்றுவருகிற ஒரு பகுதி. அங்கே விமான நிலையம் தேவை என்கிற ஒரு முக்கியமான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுவும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு வளர்ச்சியடைந்து விடக்கூடாது என்கிற உள்நோக்கத்தோடு இவ்வாறு செய்யப்படுகிறதா என்கிற கேள்வி எழுகிறது அல்லது தமிழ்நாடு இந்தியாவிற்குள் ஒரு மாநிலமாக இருக்கிறதா, இல்லையா என்கிற கேள்வி எழுகிறது.

100 நாள் வேலைத்திட்டத்தைப் பெயர் மாற்றி அறிவித்திருக்கிறீர்கள். ‘125 நாள் வேலையாக உயர்த்தியிருக்கிறோம்’ என்று அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், வளர்ச்சியடைந்த தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அந்த 100 நாள் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாத அளவுக்கு அதற்கான விதிமுறைகளை, வரையறைகளைத் திருத்தம் செய்திருக்கிறீர்கள். தமிழ்நாடு வளர்ச்சியடைந்த மாநிலம் ஆகவே, அங்கு 100 நாள் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையில்லை என்கிற அடிப்படையில் இந்த வரையறைகள் திருத்தப்பட்டிருக்கின்றன. கல்வியில், சுகாதாரத்தில், தொழில் வளர்ச்சியில் இன்றைக்கு இந்தியாவில் முதல் மாநிலம் என்கிற தகுதியைப் பெற்றிருக்கிற ஒரு மாநிலம் தமிழ்நாடு. அந்த மாநிலத்தை மேலும் ஊக்கப்படுத்த வேண்டிய அரசு, அந்த மாநிலத்திற்கு மேலும் நிதியை ஒதுக்கீடு செய்து புதிய திட்டங்களை வழங்கவேண்டிய அரசு, அதற்கு மாறாக தமிழ்நாட்டை வஞ்சிக்கும் உள்நோக்கத்தோடு செயல்படுவது கவலையளிக்கிறது.

பீகாருக்கு தேர்தல் நடந்தபோது புதிய புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், விரைவில் தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெற உள்ளது. அப்படி தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறும் சூழலிலாவது, அந்தத் தேர்தலைக் கருத்தில் கொண்டாவது பா.ச.க அங்கே மக்களிடத்தில் வளர்ச்சி பெறவேண்டும் என்கிற எண்ணத்திலாவது நிதி ஒதுக்கீடு செய்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யவில்லை. அதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் எந்தப் பயனுமில்லை. அங்கே பா.ச.க ஆட்சிக்கு வரப்போவதில்லை. எனவே, அங்கே வெற்றி பெறப் போவதுமில்லை. எனவே, அங்கே நிதிஒதுக்கீடு செய்யவேண்டிய தேவையில்லை என்பதை மறைமுகமாக அது உணர்த்துகிறது. இது மிகுந்த கவலையை அளிப்பதாகவும் இருக்கிறது. இது ஓரவஞ்சனை நடவடிக்கை.

அதுபோல, வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய MSE துறைக்கும், வேளாண்மைத்துறைக்கும் போதிய நிதிஒதுக்கீடு செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு இல்லாத இளைஞர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. தனியார்த்துறைகளை நாடிச்செல்கிற வேலைவாய்ப்பைத் தேடுகிற இளைஞர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது. அவர்களுக்கான வேலைவாய்ப்பினைத் தருவதற்கு எந்த ஏற்பாடும் இந்த பட்ஜெட்டில் இல்லை என்பது வேதனையளிக்கிறது. ஒட்டுமொத்தத்தில் தமிழ்நாட்டை இந்த பட்ஜெட் வஞ்சித்திருக்கிறது. இதுபோன்ற ஓரவஞ்சனைப் போக்குகள் ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சிக்கு எதிராக அமையும்.

இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் ஒருங்கிணைந்த வளர்ச்சியைப் பெறவேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு பட்ஜெட் தயாரிக்கப் பட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டை வஞ்சித்த இந்த பட்ஜெட்டை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எதிர்ப்புத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

Owned & Published by Thol.Thirumaavalavan, Printed by E.Sudeesh Kumar.
Printed at Chennai Offset Printers, No. 19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600 002. Published from L.I.G Flats, No. L - 12B, Ground Floor, Sarvamangala Colony, Ashok Nagar, Chennai - 600 083. Editor: THOL.THIRUMAAVALAVAN

## சென்னையில் மாமேதை கார்ல் மார்க்ஸ் சிலை திறப்பு:







தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்ட மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களின் முழு உருவச்சிலையை 06.02.2026 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில், பங்கேற்று மாமேதை மார்க்ஸ் அவர்களின் திருவுருவப் படத்திற்கு எழுச்சித்தமிழர் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். பிறகு, செய்தியாளர்களிடம், ‘‘சென்னையில் மாமேதை மார்க்ஸ் சிலை நிறுவ உருவாக்கப்பட்ட சிலையமைப்புக் கோரிக்கைக்குழுவில் விடுதலைச் சிறுத்தைகளும் இடம்பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தோம். வி.சி.க சட்டமன்ற உறுப்பினர்களும் சட்டப்பேரவையில் குரல் எழுப்பினோம். இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாமேதை கார்ல் மார்க்ஸ் அவர்களுக்கு கன்னிமரா நூலகத்தின் வாயிலில் இந்தப் பிரமாண்டமான திருவுருவச் சிலையை நிறுவி திறந்துவைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது, பெருமையளிக்கிறது. அவருக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் எமது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்’’ என்று கூறினார்.

ISSN : 2581 5474
Date of Publication : First week of Every Month
Namadhu Thamizh Mann Tamil Monthly REGISTERED No. : TN/CC(S) DN/305/2024 - 2026
RNI No.: TNTAM/2006/19426 WPP No.TN/PMG (CCR) / WPP - 128 / 2024 - 2026
Posted at Egmore RMS / 1 Pathrika channel, Chennai - 8 / Posted between 3 - 9 of every month

